©
GOVERNMENT OF TAMIL NADU
2024

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 31.20 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 36] CHENNAI, WEDNESDAY, SEPTEMBER 4, 2024
Aavani 19, Kurothi, Thiruvalluvar Aandu–2055

# Part VI—Section 2

**Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### CONTENTS

*Pages*.

TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION, CHENNAI

Amendments to the Tamil Nadu Electricity Regulatory Commission (Renewable Energy Purchase Obligation) Regulations 2023 .. .. .. .. .. .. .. ... 110-111

தமிழ்நாடு மின்வழங்கல் விதித் தொகுப்பு etc .. .. .. .. .. .. .. 112-184

| வ எண். | இருந்துவரும் வகைமுறை | திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை |
|---|---|---|
| | இணைப்பு : பின்வருவனவற்றின் நகல்கள்<br>இணைப்பு :<br>4. அறிக்கை<br>5. பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் (ஏதவாதிருப்பின்)<br>6. மகசர்<br>நகல் பணிந்தனுப்பப்படுகிறது.................<br>நகல்..................................................................<br>இவர் அந்த ஆணையினை மின்நுகர்வோர் / குடியிருப்பவர் / அனுபவதாரரிடம் சார்பு செய்ய ஏற்பாடு செய்து சார்பு செய்த நாளினைக் குறிப்பிட்டு ஒப்புகைச் சீட்டு பெற்று ஒப்புகைச் சீட்டினை இவ்வலுகத்திற்கு அனுப்பி வைக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார். | இணைப்பு :<br>1. ஆய்வு அறிக்கை<br>2. பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் (ஏதாவது இருப்பின்)<br>3. மகஜர்<br>4. தற்காலிக மதிப்பீட்டு ஆணை<br>5. படிவம் 8 ஆ– இன் படி பணித்தாள்<br>நகல் அனுப்பப்படுநர்......................<br>இந்த ஆணை குற்றம் சுமத்தப்பட்டவருக்கு நாளிட்ட ஒப்புகையுடன் சார்பு செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்யுமாறும் மற்றும் இந்த அலுவலகத்திற்கு ஒப்புகையை அனுப்புமாறும் அவர் அறிவுறுத்தப்படுகிறார்.<br>*எது பொருந்தத்தகாததோ அதனை அடித்து விடவும். |

( தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி )

சென்னை – 600 032,
2024 ஆகஸ்ட் 22

**சி. வீரமணி,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

## தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித்தொகுப்பு

*[அறிவிக்கை எண் தமிஒஆ/பவி/8– 29, நாள் 2.9.2023]*
*(Lr. No.TNERC/Legal/2601/D.No.1275/2024)*

No. VI(2)/28/2024.

மின்சாரச் சட்டம், 2003–இன் (மத்திய சட்டம் 36 / 2003) 181–ஆம் பிரிவில் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தமிழ்நாடு மின் பகிர்மான விதி தொகுப்பினை 2004, செப்டம்பர் 1–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிட்டு, மேலும் அடுத்தடுத்த திருத்தங்களை வெளியிட்டுள்ளது என்பதாலும்;

தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித்தொகுப்பிலுள்ள ஒழுங்குமுறை விதிகளுக்கு ஒருசில திருத்தம் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் 181–ஆம் பிரிவின்3–ஆம் உட்பிரிவின்படி குறிப்பிட்டுள்ளவாறு அத்தகைய திருத்தம் முந்தைய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல்வேண்டும் என்பதற்கிணங்க முந்தைய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்;

தற்போது, அதற்காக, மின்சாரச் சட்டம், 2003 –இன் (மத்திய சட்டம் 36 / 2003) 181–ஆம் பிரிவுடன் சேர்த்து படிக்கப்படும் 46 மற்றும் 86–ஆம் பிரிவுகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித் தொகுப்பில் பின்வரும் திருத்தங்களை செய்கிறது.

### திருத்தங்கள்

மேற்சொன்ன மின்சாரப் பகிர்மான விதித்தொகுப்பில் ;–

**1. ஒழுங்குமுறை விதி (2)–இல், உள் ஒழுங்குமுறை விதி (1)–இன் இறுதியில் உள்ள, பொது சொற்றொடர், பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

“இந்த விதித்தொகுப்பிலோ அல்லது உரிய சட்டத்திலோ அல்லது மின்சாரம் நுகர்வோர் உரிமைகள் விதிகள் 2020–லோ அல்லது ஆணையத்தின் வேறு ஏதேனும் ஒழுங்குமுறை விதிகள் அல்லது பொது வகையங்கள் விளக்கச் (general clause) சட்டம் 1897–லோ (1897 ஆண்டின் 10 வது மத்திய சட்டம்) வரையறுக்கப்படாமல் பயன்படுத்திய சொற்களும் வாக்கியங்களும் நடப்பில் உள்ள பொறியியல் மற்றும் வணிகவியல் துறைகளின் பேச்சு வழக்கில் புரிந்து கொள்ளப்படும் அதே பொருள்களை குறிக்கும். “

2. ஒழுங்குமுறைவிதி (6)–இன் உள் ஒழுங்குமுறை விதி (3)–இல், “ இணைப்பு–I ” என்ற சொற்றொடர் “பின்னிணைப்பு–I ”என்று மாற்றீடு செய்யப்படும் மற்றும் “இணைப்பு–II” என்ற சொற்றொடர் “ பின்னிணைப்பு–II ” என்று மாற்றீடு செய்யப்படும்.

3. ஒழுங்குமுறை விதி (27)–இல், உள் ஒழுங்குமுறை விதி (1) மற்றும் அதன் தொடர்புடைய உள்ளீடுகளுக்கு பதிலாக, பின்வரும் உள்ஒழுங்குமுறை விதி மற்றும் தொடர்புடைய உள்ளீடுளாக மாற்றீடு செய்யப்படும், அதாவது:–

“(1). மின்வழங்கலுக்கான உரிமம்தாரரின் கடமைகள் கீழ்வருமாறு:

(அ) ஒவ்வொரு மின்பகிர்மான உரிமம்தாரரும் எந்தவொரு இருப்பிடத்துக்கான சொந்தக்காரராலோ அல்லது அதில் குடியிருப்பவராலோ விண்ணப்பம் அளித்து அவ்விருப்பிடத்திற்கு மின்வழங்கல் வேண்டினால் அத்தகைய இருப்பிடத்திற்கு மின்வழங்கல் வேண்டிய விண்ணப்பத்தைப் பெற்ற ஒரு வார காலத்திற்குள் மின்வழங்கல் தரப்பட வேண்டும்.

அவ்வாறான மின்வழங்கலை தரும்பொருட்டு, புதிய மின்பகிர்மான மின்வாயில் நீட்டிப்போ அல்லது புதியதுணைமின் நிலைய துவக்கிவைப்போ தேவைப்பட்டால், அந்த மின்பகிர்மான உரிமம்தாரர் அத்தகைய இருப்பிடத்திற்கு, உரிய நீட்டிப்போ அல்லது துவக்கிவைப்போ முடிந்த உடனடியாகவோ, அல்லது இந்த ஒழுங்குமுறை விதித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள்ளோ, மின்வழங்கல் தரப்பட வேண்டும்.

மேலும் அவ்விருப்பிடம், மின்சார வழங்கல் ஏதும் இல்லாத கிராமமாகவோ அல்லது சிற்றூராகவோ அல்லது அந்தப் பகுதிக்கு மின்வழங்கல் வசதியோ இல்லாதபோது, ஆணையம் செப்பியபடி அவ்வூர் அல்லது அச்சிற்றூர் அல்லது அந்தப் பகுதிக்கு மின்மயமாக்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டிய தேவைகளை கருத்தில் கொண்டு மேற்சொன்ன மின் வழங்கும் காலத்தை நீட்டிக்கலாம்.

**விளக்கம்:**

(அ) இந்த உள்ஒழுங்குமுறைவிதியின் நோக்கங்களின் படி “விண்ணப்பம்” என்பது

மின்பகிர்வு உரிமம்தாரரால் தேவைப்படலாகும் உரிய கட்டணங்களைச் செலுத்தியதற்கான ஆவணங்களையும் மற்றும் பிற இணக்கங்களையும் காட்டும் ஆவணங்களுடன் பொருத்தமான படிவத்தில் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமாகும்.

(ஆ) மின்வழங்கல் தேவைப்படும் இருப்பிடத்திற்கு அத்தகைய மின்வழங்கலைத் தருவதற்கு, மின்கலனோ (அ) மின்தொடரோ தேவைப்பட்டால், அதை செய்து தர வேண்டியது ஒவ்வொரு மின்பகிர்மான உரிமம்தாரரின் கடமையாகும்.

இருந்தபோதிலும், ஆணையத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் உரிய விலையை அல்லது கட்டணத்தை அந்நுகர்வோர் உரிமம்தாரருக்குச் செலுத்த இசைந்தாலொழிய எவரும் சொந்த இடத்திலோ அல்லது குடியிருக்கும் இடத்திலோ உரிமம்தாரரிடமிருந்து மின்சாரத்தை வழங்குமாறு கேட்பதற்கோ (அ) தொடர்ந்து பெறுவதற்கோ உரிமை கோர முடியாது.

(இ) ஒரு மின்பகிர்மான உரிமம்தாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் மின்சாரம் வழங்கத் தவறினால், திருத்தம் செய்யப்பட்ட ஒழுங்குமுறையின் 21–வது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க விண்ணப்பதாரருக்கு உரியத்தொகை செலுத்த வேண்டும்.

எனினும் தனது பெயரிலுள்ள வேறு ஏதேனும் மின்இணைப்பு தொடர்பாக உள்ள நிலுவைத்தொகையை விண்ணப்பதாரர் செலுத்தத் தவறிய நிலையில் மின்பகிர்மான உரிமம்தாரர் அவ்விண்ணப்பதாரருக்கு மின்சாரம் வழங்க மறுப்பார்.”

4. ஒழுங்குமுறை விதி (27)–இன் உள் ஒழுங்குமுறைவிதி (2)(a)–இல், “இணைப்பு – III என்ற சொற்றொடர் “ பின்னிணைப்பு – III ” என்று மாற்றீடு செய்யப்படும்.

5. ஒழுங்குமுறை விதி (27)–இன் உள் ஒழுங்குமுறை விதி (2)–இல், கூறு (b) மற்றும் அதன் உள்ளீடுகளுக்கு பிறகு பின்வருபவை சேர்க்கப்படும்:–

“விண்ணப்பம் பதிவின் போது விண்ணப்பதாரரின் நிலத்தில் ஏற்கனவே கிணறு / ஆழ்துளை கிணறு இல்லாத பட்சத்தில், கிணறு / ஆழ்துளை கிணறு தோண்ட வேண்டும் என்று ஆரம்ப கட்டத்திலேயே நிர்பந்திக்கக் கூடாது.”

6. ஒழுங்குமுறை விதி 27–இன் உள் ஒழுங்குமுறை விதி (2)–இல் கூறு (c) மற்றும் அதன் தொடர்பான உள்ளீடுகளுக்கு பதிலாக, பின்வரும் கூறு மற்றும் தொடர்பான உள்ளீடுகளாக மாற்றீடு செய்யப்படும், அதாவது:–

“(c) விண்ணப்பதாரரின் முறை, வரிசை கிரம எண் வரிசையில் வரும்போது, உரிமம்தாரர், இருக்கின்ற (அ) முன்மொழிகின்ற கிணறு / ஆழ்துளைக் கிணறு மற்றும் நிலத்தின் உடைமையுரிமை, நில அளவைப் புல எண்கள் பற்றி விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விவரங்கள் அந்தத் தேதியில் மாறாமல் உள்ளதா என்று கண்டறிவதற்கு விண்ணப்பதாரருக்கு 90 நாட்கள் அறிவிப்பு வழங்குதல் வேண்டும். அறிவிப்பைப் பெற்றுக் கொண்டதற்காக, விண்ணப்பதாரரிடமிருந்து உரிய ஒப்புகையைப் பெற்று பாதுகாத்தல் வேண்டும். மின்னோடி நீர் இறைப்பி (motor pump set), மின்கொண்மி (capacitor) ஆகியவை இந்த நிலையில் வற்புறுத்தக்கூடாது. மின்னோடி நீர் இறைப்பி (motor pump set), மின்கொண்மி (capacitor) போன்றவற்றை நிறுவி மின்சுருளுடன் இணைப்பு செய்து கிணறு / ஆழ்துளைக் கிணறு தயார் செய்யப்பட்ட பிறகு, விண்ணப்பதாரர் பிரிவு அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆயத்த நிலைப் பதிவேட்டில் தேதியிட்ட கையொப்பத்துடன் விவரங்களை பதிய வேண்டும். அத்தகைய பதிவின் தேதியிட்ட வரிசை கிரம எண்ணின்படி, கிணறு / ஆழ்துளைக் கிணற்றின் விவரங்கள் மற்றும் இருப்பை உறுதிப்படுத்துவதற்காக பிரிவு அலுவலர் கள ஆய்வு செய்து, மூன்று நாட்களுக்குள் தனது தேதியிட்ட கையொப்பத்துடன் ஆயத்த நிலைப் பதிவேட்டில் பதிய வேண்டும்.

ஆயத்த நிலைப் பதிவேட்டில் விண்ணப்பதாரரால் விவரங்களைப் பதிவு செய்யும் தேதி, மதிப்பீட்டைத் தயார் செய்வதற்கு உண்டான மூப்பு வரிசையாக கடைபிடிக்கப்படும். “

7. ஒழுங்குமுறை விதி (27)–இன் உள் ஒழுங்குமுறை விதி (2)(i)–இல், “இணைப்பு – III” என்ற சொற்றொடர், “ பின்னிணைப்பு – III “ என்று மாற்றீடு செய்யப்படும்.

8. ஒழுங்குமுறை விதி (27)–இன், உள்ஒழுங்குமுறை விதி (3) மற்றும் விளக்கம் பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது :–

“(3) உயர் அழுத்த மின்னிணைப்பிற்கான விண்ணப்பம், படிவம்–4 இல் இருத்தல் வேண்டும். புதிய (அ) கூடுதல் தேவைக்கான தாழ்வழுத்த மின்னிணைப்பு (தற்காலிக மின்வழங்கல், விவசாய மற்றும் குடிசை தவிர), தற்காலிக மின்னிணைப்பு, தாழ்வழுத்த விவசாய மின்னிணைப்பு, தாழ்வழுத்த குடிசை மின்னிணைப்பு, முறையே படிவம் 1, 1A, 2 மற்றும் 3–இன் படி இருத்தல் வேண்டும்.

**விளக்கம்:**

(அ) விண்ணப்பதாரர் தன்னுடைய விருப்பத்தின் பேரில் விண்ணப்பத்தை நேரில் ஒப்படைக்கவோ அல்லது மின்பகிர்மான உரிமம்தாரரின் இணையதள முகப்பிலோ (web portal) அல்லது கைபேசி செயலி (mobile app ) மூலமாகவோ விண்ணப்பிக்கலாம். நிகழ்நிலையில் செய்யப்படும் விண்ணப்பங்களுக்கு, விண்ணப்பத்தை சமர்ப்பித்தவுடன் பதிவு எண்ணுடன் கூடிய ஒப்புகை உருவாக்கப்பட்டு விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்படும்.

(ஆ) நேரில் ஒப்படைக்கப்பட்ட விண்ணப்பம் பெறப்பட்டவுடன் உரிமம்தாரரால் ஊடுகதிர் (scan) மூலம் பதிவிடப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். விண்ணப்பத்தின் பதிவு எண்ணுடன் கூடிய ஒப்புகை உருவாக்கப்பட்டு விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்படும்.

(இ) உயரழுத்த வகையினங்களுக்கு, தேவையான கட்டணங்கள் செலுத்தும் நேர்வில் அவை பதிவு செய்யப்படும். விண்ணப்பம் முழுமையாக இல்லாத பட்சத்தில், குறைபாடுகளை சுட்டிக்காட்டி பதிவு செய்யப்படாமல் ஏழு நாட்களுக்குள் திருப்பி அனுப்பப்படும்.

தாழ்வழுத்த வகையினங்களுக்கு, பதிவுக் கட்டணங்கள் செலுத்தப்படின் விண்ணப்பங்கள் முதலில் பதிவு செய்யப்படும். தேவையான ஆவணங்களுடனான விண்ணப்பம் முழுமையாக இல்லாவிடில், குறைபாடுகளை சரி செய்து மீண்டும் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரருக்கு மூன்று நாட்களுக்குள் அறிவிப்பு அனுப்பப்படும்.

இரு வகையினங்களுக்கும் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள், அறிவிப்பு பெறப்பட்ட ஏழு தினங்களுக்குள் விண்ணப்பதாரரால் சரி செய்யப்பட்டு மீண்டும் சமர்ப்பிக்கப்படவேண்டும், தவறும் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(ஈ) குறைப்பாடுகள் சரிசெய்யப்பட்டு விண்ணப்பம் மீண்டும் சமர்ப்பிக்கப்படும் போது, அதற்கு ஒப்புகை அளிக்கப்படும். குறிப்பிட்ட நேரத்திற்குள் மீண்டும் சமர்ப்பிக்கப்படாவிட்டால், விண்ணப்பதாரருக்கு உரிய அறிவிப்புடன் விண்ணப்பம் ரத்துசெய்யப்பட்டு, கட்டணங்கள் ஏதேனும் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றில் பதிவுக் கட்டணங்கள் தவிர மற்றவை விண்ணப்பதாரருக்கு திருப்பியளிக்கப்படும். விண்ணப்பத்தை ரத்து செய்தவுடன், நிகழ்நிலையில் கட்டணத்தை திருப்பி செலுத்துவதற்கேற்ப விண்ணப்பதாரர் தனது வங்கிக் கணக்கின் விவரங்களை உரிமம்தாரருக்குத் தெரிவிக்கவேண்டும். உரிமம்தாரர் அத்தகைய தகவல் பெறப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் விண்ணப்பதாரரின் வங்கி கணக்கில் வரவு வைக்கும் வகையில் கட்டணத்தை திருப்பி செலுத்த வேண்டும்.

(உ) தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்களுடன் அனைத்து விவரங்களுடன் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு தயாரிக்கப்பட்ட ஒப்புகை தேதி, விண்ணப்பம் பெறப்பட்ட நாளாகக் கருதப்படும்.

(ஊ) அனைத்து வகைகளுக்கும், விண்ணப்பம் பெறப்பட்ட பிறகு பணி நாட்களில் இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் ஒப்புகை தயாரிக்கப்படும் அல்லது அனுப்பப்படும்

(எ) மின்னிணைப்பு வழங்கும் வரை விண்ணப்பத்தின் செயலாக்க நிலையை கண்காணிக்கும் பொருட்டு இணையதளம் செயலி அல்லது கைபேசி செயலி அல்லது குறுஞ்செய்தி அல்லது மற்ற வகையிலான முறையில், தனிப்பட்ட பதிவு எண்ணின் அடிப்படையிலான விண்ணப்பக் கண்காணிப்பு இயக்கமுறையை உரிமம்தாரர் நிறுவுதல் வேண்டும்

(ஏ) அணைத்து வகை விண்ணப்பங்களும் மாநில / மத்திய அரசால் வழங்கப்பட்ட விண்ணப்பதாரரின் அடையாளச் சான்றிதழுடன் உரிய விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பிற தேவைப்படும் ஆவணங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

(ஐ) புதிய மின் இணைப்புக்கான விண்ணப்பப் படிவம் கூடுதல் மின் தேவைக்கும் பொருந்தும். புதிய மின் இணைப்புக்குத் தேவைப்படும் பாதுகாப்பு முறை மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஆவணங்கள் கூடுதல் மின் தேவைக்கும் பொருந்தும்.

(ஒ) உரிமம்தாரர் நிகழ்நிலை முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கைபேசி செயலியை உருவாக்க வேண்டும்.''

**9.** ஒழுங்குமுறை விதி (27)–இன் உள் ஒழுங்குமுறை விதி (4).–இல், "இணைப்பு – III என்ற சொற்றொடர், " பின்னிணைப்பு–III " என்று மாற்றீடு செய்யப்படும்.

**10.** ஒழுங்குமுறை விதி (27)–இன் உள் ஒழுங்குமுறை விதி (11A)க்கு பிறகு, பின்வருபவை சேர்க்கப்படும், அதாவது:–

"மேலே குறிப்பிட்டுள்ள பாதுகாப்பு உடன்படுகை தவிர, தடையில்லா சான்றிதழ் வழங்குவதற்காக (தற்போது தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி 12 மீ உயரம் போன்றவை) அரசு விதிகளோ அல்லது பிற சட்டப்பூர்வ உத்தரவுகளிலோ கட்டிட வரம்பின் உயரம் குறிப்பிடப்பட்டிருந்தால், விண்ணப்பதாரர் அத்தகைய கட்டிடங்களுக்கான வரை பட ஒப்புதலையும் இணைக்க வேண்டும். திட்ட அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடத்தின் உயரம் மேற்கூறிய விதிகள் / ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்பை விட குறைவாக இருந்தால், விதிகள் / ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தடையில்லா சான்றிதழ் வலியுறுத்தப்படாது. இந்த வகைகளுக்கும் வெளிப்படையான அளவீடு தேவையில்லை.''

**11.** ஒழுங்குமுறை விதி (27)–இன் உள் ஒழுங்குமுறை விதி (12) –இல், "இணைப்பு – III'' என்ற சொற்றொடர் " பின்னிணைப்பு – III'' என்று மாற்றீடு செய்யப்படும்.

**12. ஒழுங்குமுறை விதி (27) –இன் உள் ஒழுங்குமுறை விதி (15A) க்கு பிறகு, பின்வருபவை சேர்க்கப்படும், அதாவது:–**

"15(B) ஆணையத்தால் அவ்வப்போது வெளியிடப்பட்ட மின் கட்டண வீதப்பட்டியல் உத்தரவின்படி, பலஅடுக்கு குடியிருப்பு வீடு வளாகங்களிலுள்ள பொதுவான வசதிகளுக்கான மின்கட்டண வீதம் I–D ஐ உள்ளடக்கிய ஒன்றுக்கு மேற்பட்ட மின் இணைப்புகளுக்கு, மேற்கண்ட துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன.''

**13 ஒழுங்குமுறை விதி (27)–இன் உள் ஒழுங்குமுறை விதி ( 16 )–இல் "இணைப்பு III" என்ற சொற்றொடர்,, "பின்னிணைப்பு–III" என்று மாற்றீடு செய்யப்படும்.**

14 ஒழுங்குமுறை விதி 29–இன் உள் ஒழுங்குமுறை விதி (12)(a)க்கு பதிலாக, பின்வருபவை மாற்றீடு செய்யப்படும், அதாவது:–

"(12)(a) பின்வரும் வரன்முறைகளின்படியான வெளியிடமானது, மின்னிணைப்புகள் தேவைப்படுகிற குழு வீடுகள் / வணிக வளாகம் போன்ற இடங்களில், ஒன்று (a) எதிர்காலத்தையும் சேர்த்து நேரிடக்கூடிய 5 மெகா வோல்ட் ஆம்பியருக்கு மேற்படுகிற / மேற்படும் மின் தேவை அல்லது (b) மொத்த தரைப்பரப்பு 30,000 சதுர மீட்டர் மற்றும் சாய்வுத்தளம் / அடித்தளம் நீங்கலாக அதற்கு மேல் கட்டப்பட்டுள்ள அல்லது கட்டப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டுமானம், போன்ற மொத்த தேவைக்கு துணை மின்நிலையம் / இணைப்பு மின் நிலையம் அமைப்பதற்கு இலவசமாக விண்ணப்பதாரரால் இடம் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

திட்ட வளாகத்திற்குள் நிலம் இல்லாத பட்சத்தில், விண்ணப்பதாரர் திட்ட வளாகத்திற்கு வெளியே ஒரு கிலோ மீட்டருக்கு மிகாமல் தெளிவான மற்றும் போதுமான பொது வழிதடம் இருக்குமாறும் மற்றும் மின்கம்பி / புதைவடம் மற்றும் உபகரணங்களை எந்த இடையூறும் இல்லாமல் அமைக்க மற்றும் பராமரிக்க எளிதாக அணுகும் வகையில் தகுந்த நிலத்தை ஒதுக்கலாம். அத்தகைய மின்கம்பிகள், புதைவடம், உபகரணங்கள், துணைக்கருவிகள் போன்றவற்றை அமைப்பதற்குண்டான கூடுதல் செலவு மற்றும் தேவைப்படும் கட்டுமானப் பணிகள் ஏதேனும் இருந்தால் விண்ணப்பதாரரால் ஏற்கப்படும். இருப்பினும், நிலத்தின் விலையில் உள்ள வேறுபாடு ஏதேனும் இருந்தால் செலுத்த வேண்டியதில்லை.

தொழில்துறை வளாகங்கள், சிறப்பு பொருளாதார மண்டலம் (SEZ) போன்ற தனிப்பயனாக்கப்பட்ட பெரிய அளவிலான திட்டங்களுக்கு நிலம் தேவைப்பட்டால், உரிமம்தாரர் முடிவின்படி தற்போதைய / வருங்கால மின்சுமைக்கேற்ப 400 kV முதல் 33kV மின்னழுத்த அளவு வரை வெளிப்புற துணை மின்நிலையத்தை நிறுவ தேவையான நிலத்தை விண்ணப்பதாரர் ஒதுக்க வேண்டும். சரியான மின்னழுத்தம், மின்விநியோகத்தின் தரம் மற்றும் தடையில்லா மின்விநியோகத்திற்கான செயல்பாட்டு நெகிழ்வுத்தன்மையை உறுதிப்படுத்த, நிலத்தின் பரப்பளவில் பரவியிருக்கும் மின்சுமையின் தீவிரத்தைப் பொறுத்து வளாகத்திற்குள் உள்ள ஒற்றை நிலம் அல்லது பல நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.''

**15. ஒழுங்குமுறை விதி 29—இன் உள் ஒழுங்குமுறை விதி (12)(b) மற்றும் அதன் தொடர்பான உள்ளீடுகள், பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:—**

''12(b) துணை — மின் நிலையங்களை நிறுவுவதற்கான நிலத் தேவையானது, கீழே கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்புடன் குறைந்தபட்ச வரம்பாக இருத்தல் வேண்டும்.

| *துணை நிலையத்தின் மின்னழுத்த அளவு* | *தேவையான நிலப்பரப்பின் களஅளவு மற்றும் மொத்த நிலபரப்பு சதுர மீட்டரில்* | | | | *துணைமின்நிலைய நிலத்தின் இரண்டு பக்கங்களிலும் உள்ள சாலைகளின் அகலம், போக்குவரத்துக்கான பிரதான சாலைக்கான அணுகல் (துணைமின்நிலைய பகுதியைத் தவிர)* |
|---|---|---|---|---|---|
| | *வெளிப்புற காற்று காப்பிடப்பட்ட துணை மின் நிலையம் ( மரபு முறையானது )* | *உட்புற துணை மின்நிலையம் (அனைத்து உ.அ. / தா.அ. உபகரணங்கள், மின்வாயில் மற்றும் பேழைகள் உட்புறம் மட்டும் உயரழுத்த மின்மாற்றி வெளிப்புறம்)* | *பகுதி உட்புற துணை மின்நிலையம் (உ.அ. மின்வாயில், உ அ உபகரணம், மின் மாற்றி வெளிப்புற — தா.அ. உபகரணம், அனைத்து மின்வாயில் பேழைகள் - உட்புறம்* | *எரிவாயு காப்பிடப்பட்ட துணை மின் நிலையம்* | |
| 33 கி.வோ. து.மி. | 40 மீ. x 60 மீ. 2400 ச.மீ. | 25 மீ. x 30 மீ. 750 ச.மீ. | 35 மீ. x 35 மீ. 1225 ச.மீ. | 20 மீ. x 20 மீ. 400 ச.மீ. | 6 மீ. |
| 110 கி.வோ. து..மி. | 60 மீ. x 60 மீ. 3600 ச.மீ. | நடைமுறையில் இல்லை | 40 மீ. x 50 மீ. 2000 ச.மீ. | 30 மீ. x 40 மீ. 1200 ச.மீ. | 6 மீ. |
| 230 கி.வோ. து.மி. | 120 மீ. x 200 மீ. 24,000 ச.மீ. | 90 மீ. x 180 மீ. 16,200 ச.மீ. | நடைமுறையில் இல்லை | 60 மீ. x 80 மீ. 4800 ச.மீ. | 6 மீ. |
| 400 கி.வோ. து.மி. | 500 மீ. x 320 மீ. 1,60,000 ச.மீ. | நடைமுறையில் இல்லை | நடைமுறையில் இல்லை | 200 மீ. x 100 மீ. 20000 ச.மீ. | 8 மீ. |

வளாகங்களின் மேம்பாட்டாளர்கள் / உரிமையாளர்கள் கூடுதல் மின் சுமைக்காக விண்ணப்பிக்கும் போதும் ஒவ்வொரு நிலையங்களிலும் கூடுதல் கட்டுமானங்கள் கட்டி மேம்படுத்தும்போதும் துணை—மின் நிலையம் நிறுவுவதற்காக மேலேயுள்ள நிலத் தேவையானது, தற்போதுள்ள மற்றும் கூடுதல் மின்சுமை /கட்டுமானப் பகுதி இரண்டையும் சேர்த்து, மொத்த மின்சுமை / மொத்த கட்டுமானப் பகுதிக்குப் பொருந்தத்தக்கதாகும்.''

**16. ஒழுங்குமுறை விதி 29—இன் உள் ஒழுங்குமுறைவிதி (12)(d) மற்றும் அதன் விளக்கங்கள், பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:—**

''12(d) மொத்த மின்தேவை 5 மெகா வோல்ட் ஆம்பியருக்கு மேற்படுகிறவிடத்து / மேற்படக்கூடிய பட்சத்தில் அல்லது மொத்தத் தரைப்பரப்பு 30,000 சதுர மீட்டர் மற்றும் அதற்கு மேலும் (சாய்வுதளம் / அடித்தளம் நீங்கலாக) கட்டப்படும் பட்சத்தில் / கட்டப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறவிடத்து, விண்ணப்பதாரர் வழக்கமான வெளிப்புற காற்று காப்பு (AIS) துணை—மின் நிலையம் நிறுவுவதற்குப் பொருத்தமான நிலத்தை ஒதுக்க வேண்டும். பரிசுப் பத்திரம் அல்லது இலவச விற்பனைப் பத்திரம் அல்லது ஆண்டுக்கு ரூ.1/— வீதம் 99 ஆண்டுகளுக்கு குத்தகைப் பத்திரம் மூலம் நிலம் வழங்கப்பட வேண்டும். விண்ணப்பதாரர் வழக்கமான வெளிப்புற காற்றுகாப்பு துணை மின்நிலையம் அல்லாத உட்புற துணை மின்நிலையம் அல்லது பகுதி உட்புற துணை மின்நிலையம் அல்லது எரிவாயு காப்பிடப்பட்ட (GIS) துணை — மின்நிலையத்திற்கு பொருத்தமான நிலத்தை ஒதுக்குவதற்குத் தெரிவு செய்யும் நேர்வில், விண்ணப்பதாரர் உட்புற துணை மின்நிலையம் அல்லது பகுதி உட்புற துணை மின்நிலையம் அல்லது எரிவாயு காப்பிடப்பட்ட (GIS) துணை — மின்நிலையம் அமைப்பதற்காக வழங்கப்பட்ட இடத்திற்கும் வழக்கமான வெளிப்புற காற்று காப்பு துணை—மின் நிலையத்திற்குமான இடையே உள்ள வேறுபாட்டு தொகையை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பதாரர், விண்ணப்பிக்கப்பட்ட மின் தேவையின் அளவு அல்லது உரிமம்தாரரால் மதிப்பிடப்பட்ட மின் தேவையின் அளவு, இவற்றில் எது உயர்ந்த அளவோ அந்த அளவுக்குச் சமமான துணை— மின் நிலையம் அமைப்பதற்காக நிலத்தை ஒதுக்க வேண்டும்.

**விளக்கம்:**

(i) உட்புற துணை மின்நிலையம் மற்றும் வெளிப்புற வகையான மின் நிலையங்களுக்கிடையேயான அல்லது பகுதி உட்புற துணை மின்நிலையம் மற்றும் வெளிப்புற வகையான மின் நிலையங்களுக்கிடையேயான அல்லது எரிவாயு காப்பிடப்பட்ட (GIS) துணை – மின்நிலையம் மற்றும் வெளிப்புற வகையான மின் நிலையங்களுக் கிடையேயான செலவில் ஏற்படும் வேறுபாட்டுத் தொகையைக் கணக்கிடுகையில் பின்வரும் முறை பின்பற்றப்படும்:

(ii) உயர் மின்னழுத்த சாதனங்கள் சம்பந்தமான பகுதி, விண்ணப்பதாரர்களுக்கு மின்சாரம் ஊட்டப்படுகிற மின்மாற்றி/ மின்மாற்றிகள், அதன் தாழ்வழுத்த மின்னூட்டி, அதனைச் சார்ந்த தாழ்வழுத்த பிரிகலன், மின்னோட்ட மின் மாற்றிகள், இணைப்பிகள், கட்டுப்பாட்டு சாதனங்கள் விண்ணப்பதாரருக்கு மின்சாரம் ஊட்டப்படுகிற தாழ்வழுத்த மின்னூட்டிகளின் எண்ணிக்கை, அவைகளின் மின்னூட்ட சாதனம், கட்டுப்பாட்டு சாதனங்கள், மின்வடங்கள், துணைக் கருவிகள், முதலியவற்றை வெளிப்புற துணை–மின் நிலையத்தின் இதே போன்ற ஒத்தப் பகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து அவற்றிற்கிடையேயான செலவுத்தொகை வேறுபாட்டினைக் கணக்கிட வேண்டும்.

(iii) எஞ்சிய மின்மாற்றிகள், அதனுடன் தொடர்புடைய உயர்மின்னழுத்த மின்னிணைப்பிகள், தாழ்வழுத்த பிரிகலன்கள், மின்னோட்ட மின்மாற்றிகள், மின்னிணைப்பிகள், கட்டுப்பாட்டு சாதனங்கள், மற்ற பகுதிகளுக்கு மின்னூட்டம் அளிக்கின்ற தாழ்வழுத்த மின்னூட்டிகள், அவைகளின் மின்னூட்டி சாதனம், கட்டுப்பாட்டு சாதனங்கள், மின் வடங்கள், துணைக்கருவிகள் முதலியவற்றின் தொடர்பான செலவுத் தொகை உரிமம்தாரரால் முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(iv) கட்டுப்பாட்டு அறை கட்டிடம் மற்றும் வழக்கமான வெளிப்புற (AIS) துணை மின் நிலையத்திற்கும் மற்றும் விண்ணப்பதாரரால் நிலம் வழங்கப்படும் பிற வகை துணை மின்நிலையம் தொடர்பான பிற கட்டுமான பணிகளுக்கும் இடையேயான செலவில் உள்ள வேறுபாடு விண்ணப்பதாரரால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.''

**17. ஒழுங்குமுறை விதி 29–இன் உள் ஒழுங்குமுறை விதி (16) மற்றும் அதன் தொடர்புடைய உள்ளீடுகள், பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

''29(16) மின் வழங்கல் புள்ளி அமைய வேண்டிய இருப்பிடம் பற்றிய உடன்பாடு ஏற்பட்டதும், பொறியாளர், கோரும் நுகர்வோருக்கு விநியோக மின்மாற்றி மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டமைப்பு பொருட்கள் மற்றும் துணைப்பொருட்களின் விலையைத் தவிர்த்து, நுகர்வோரின் வளாகத்தில் உள்ள பகுதிக்கான மின்னிணைப்புத் தொடர் அமைப்பதற்கான விலை மதிப்பீட்டை அனுப்பி வைப்பார். கோரும் நுகர்வோர், மதிப்பீடு செய்த தொகையை முன் கூட்டியே முழுமையாகச் செலுத்திய பிறகே, மின்னிணைப்புத் தொடர் அமைப்பதற்கான பணி மேற்கொள்ளப்படும்.''

**18. ஒழுங்குமுறை விதி 29–இன் உள் ஒழுங்குமுறை விதி (17), அதன் தொடர்புடைய உள்ளீடுகள், பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

''(17) மின்னிணைப்புத் தொடர் உரிமம்தாரரின் சொத்தாகும். அதை அவர், அவரது சொந்தச் செலவில் பேணுதல் வேண்டும். நுகர்வோர் வளாகத்திற்குள் அமைக்கப்பட்டுள்ள உபகரணங்கள், மின் கம்பங்கள், மின் விநியோக பெட்டிகள் மின்னளவி மற்றும் துணைக்கருவிகள் ஆகியவை நுகர்வோரால் பாதுகாக்கப்பட்டு உரிமம்தாரரால் பராமரிக்கப்படும்.

மின் இணைப்பிற்காக அமைக்கப்பட்ட அருகாமையிலுள்ள மின் கம்பம் / மின் விநியோக பெட்டியிலிருந்து மின்னளவியுடன் இணைக்கப்பட்டுள்ள மின்கம்பி / கம்பிவடம் உள்ளிட்ட மின் இணைப்பிற்கு தொடர்பான பொருட்கள் நுகர்வோரால் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்படுவதோடு அவை சேதம் அல்லது நீண்ட காலத்தினால் தேய்மானத்தினால் மாற்றீடு செய்யும் செலவினை நுகர்வோரே ஏற்கவேண்டும்.''

**19. ஒழுங்குமுறை விதி 31–இன் உள் ஒழுங்குமுறை விதி (1) க்கு பிறகு பின்வருபவை சேர்க்கப்படும், அதாவது:–**

''அசல் சோதனை அறிக்கை ஒரு நிரந்தர மற்றும் சட்டப்பூர்வ பதிவாகும் என்பதால் உரிமம்தாரரால் தக்கவைக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.''

**20. ஒழுங்குமுறை விதி 31–இன் உள் ஒழுங்குமுறை விதி (5), பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

''(5) மின்னிணைப்பு கோரும் நுகர்வோர் மின்வழங்கல் ஆயத்த அறிவிப்பு காலத்துக்குள் மின் வழங்கலைப் பெற்றுக் கொண்டால், மின் வழங்கல் ஆயத்த முதல் அறிவிப்பு தேதியிலிருந்து மின் வழங்கலைப் பெற்ற தேதிவரையிலான காலத்துக்கு, கோரப்பட்ட முழு மின்தேவைக்கு, அறிவிப்பு செய்யப்பட்ட கட்டணவீதத்தில் மாதச் சிறுமக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

மின் இணைப்புக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவைத் தாண்டி கால நீட்டிப்பைப் பெறும் நுகர்வோர்கள், நிர்ணயிக்கப்பட்ட தாமத செலுத்த உபரி கட்டணம் (BPSC) செலுத்த வேண்டும்.''

**21 ஒழுங்குமுறை விதி 33–இன் உள் ஒழுங்குமுறை விதி (1)–இல் ''இணைப்பு– III'' என்ற சொற்றொடர் ''பின்னிணைப்பு– III'' என்று மாற்றீடு செய்யப்படும்.**

**22. ஒழுங்குமுறை விதி 33–இன், உள் ஒழுங்குமுறை விதி (5), அதன் தொடர்புடைய உள்ளீடுகள், பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

''(5) உள் ஒழுங்குமுறை (3)–இன் கீழ் நுகர்வோர் கோரியபடி மின்னளவி நிரந்தரமாக துண்டிக்கப்பட்டு ஒப்பந்தம் முடிவடையும் பட்சத்தில், உரிமம்தாரர் மின்னளவி இயல்பான செயல்பாடு மற்றும் மின்நுகர்வு நல்ல முறையில் செயல்படும் நிலையில் ஒரு சிறப்பு மின்னளவிடுதலுக்கு ஏற்பாடு செய்து இறுதி பட்டியல் தயாரிக்க வேண்டும். இறுதி பட்டியல் தொகை செலுத்தப்பட்ட பிறகு மின் இணைப்பு உடனடியாக துண்டிக்கப்படுதல் வேண்டும். இறுதி பட்டியலிற்கும் நிரந்தரத் துண்டிப்புக்கும் இடையே மின் நுகர்வினால் நிலுவைத்தொகை இருப்பின் அல்லது நுகர்வோர் தனது மின்னிணைப்பி(புகளி)ல் ஏதேனும் ஒன்றில் செலுத்த வேண்டிய நிலுவை தொகை இருப்பின் அவை பாதுகாப்பு வைப்பு மற்றும் அதன் மீதான வட்டியில் சமன்செய்யப்படும். மீதமுள்ள பாதுகாப்பு வைப்பு மற்றும் வட்டி ஏதேனும் இருந்தால் நுகர்வோரின் விருப்பத்தின்படி நுகர்வோரின் வேறு ஏதேனும் மின் இணைப்பிற்கு

மாற்றப்படும் அல்லது நுகர்வோருக்குத் திருப்பியளிக்கப்படும். நுகர்வோர் பணத்தைத் திரும்பப்பெறத் தேர்வுசெய்தால், உரிமம்தாரர் விண்ணப்பதாரரின் வங்கிக் கணக்கில் நிகழ்நிலை மூலம் பணத்தைத் திரும்பச் செலுத்தும் வகையில், நுகர்வோர் தனது வங்கிக் கணக்கின் விவரங்களை உரிமம்தாரருக்குத் தெரிவிக்க வேண்டும். அத்தகைய விவரங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து அல்லது மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட தேதியிலிருந்து எது பிந்தையதோ அதிலிருந்து ஏழு நாட்களுக்குள் நுகர்வோரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படவேண்டும். பரிவர்த்தனையை ஒழுங்குபடுத்துதல் / கழட்டப்பட்ட மின்னளவியினை கணக்கிலெடுத்தல் மற்றும் கணக்குகளை முடித்தல் பின்னர் செய்யப்படவேண்டும்.

வைப்புத்தொகை மற்றும் அதன் மீதான வட்டியை விட நிலுவைத் தொகை அதிகமாக இருந்தால், நிரந்தரத் துண்டிப்பு மற்றும் ஒப்பந்தம் முடிவடைவதற்கு முன், நுகர்வோர் நிலுவைத் தொகையை முழுமையாகச் செலுத்த வேண்டும்.''

**23. ஒழுங்குமுறை விதி 33—இன், உள் ஒழுங்குமுறைவிதி (5)க்கு பிறகு, பின்வரும் உள் ஒழுங்குமுறை விதி சேர்க்கப்படும், அதாவது:—**

“(6) உள் ஒழுங்குமுறை (4)—இன் கீழ், உரிமம்தாரரால் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டால், நிறுத்தப்பட்ட மின் இணைப்புகளில் நிலுவைத் தொகை ஏதேனும் இருப்பின் மற்றும் அதே நுகர்வோரின் பிற மின் இணைப்புகளில் நிலுவைத் தொகை ஏதேனும் இருப்பின் அவற்றை உரிமம்தாரர் ஒப்பந்தம் நிறுத்தப்பட்ட மின் இணைப்பில் உள்ள பாதுகாப்பு வைப்பு தொகை மற்றும் அதன் மீதான வட்டியிலிருந்து சரி செய்ய வேண்டும். அவ்வாறு சரி செய்த பிறகு மீதமுள்ள வைப்பு தொகை ஏதேனும் இருப்பின் நுகர்வோரின் விருப்பத்தின்படி ஒப்பந்தம் நிறுத்தப்பட்ட முப்பது நாட்களுக்குள் நுகர்வோரின் வேறு ஏதேனும் மின் இணைப்பிற்கு மாற்றப்படும் அல்லது நுகர்வோருக்குத் திருப்பியளிக்கப்படும். பரிவர்த்தனையை ஒழுங்குபடுத்துதல் / கழட்டப்பட்ட மின்னளவியினை கணக்கிலெடுத்தல் மற்றும் கணக்குகளை முடித்தல் பின்னர் செய்யப்படவேண்டும். “

**24. ஒழுங்குமுறை விதி 39—இன், உள் ஒழுங்குமுறை விதி (2)—இல், கூறு (i) மற்றும் அதன் தொடர்புடைய உள்ளீடுகள், பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:—**

“(i) தற்காலிக மின் வழங்களுக்கு, முன்பணம் செலுத்தும் வசதியுள்ள மின்னளவிகள் (pre—paid meter) (மீள்நிரப்பு அட்டை முறை) பொருத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரர் விருப்பம் தெரிவித்தால் பரிந்துரைக்கப்பட்ட தரநிலைகள், விவரக்குறிப்புகள் மற்றும் தொடர்புடைய விதிமுறைகளின்படி முன்பணம் செலுத்தும் வசதியுள்ள மின்னளவிகள் சொந்தமாக வாங்கலாம் அல்லது மின் பகிர்மான உரிமம்தாரரால் அந்த மின்னளவிகள் வழங்கப்பட விரும்பலாம். நுகர்வோர் தனது சொந்த மின்னளவியை வாங்கத் தேர்ந்தெடுக்காத பட்சத்தில், உரிமம்தாரர் சட்டப்பூர்வ தரநிலைகள் மற்றும் தொடர்புடைய ஒழுங்குமுறைகளுக்கு இணங்க மின்னளவிகளை வழங்குவார். மேலும், நுகர்வோர் மின்னளவியின் விலைக்கு போதுமான பாதுகாப்புத் தொகை வழங்க வேண்டும்.

முன்பணம் செலுத்தும் மின்னளவிக்கு, மின்நுகர்வுக்கான பிணை வைப்புத் தொகை செலுத்த வேண்டிய தேவையில்லை.

சந்தையில் முன்பணம் செலுத்தும் வசதியுள்ள மின்னளவிக்கு பற்றாக்குறை ஏற்பட்டு விண்ணப்பதாரர் மற்றும் உரிமம்தாரர் ஆகிய இருவராலும் வாங்கி வழங்க முடியாத நிலையில் மரபு முறையான மின்னளவியினை விண்ணப்பதாரர் அல்லது உரிமம்தாரர் யாரேனும் ஒருவரால் வழங்கப்படலாம்.

மேற்கண்ட நேர்வில், பிணை வைப்புத்தொகையானது இரண்டு பட்டியல் சுற்றுக் கால மின்நுகர்வு கட்டணங்களுக்குச் சமமாக கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டு வசூலிக்கப்படும் மற்றும் தற்காலிக மின்வழங்கல் காலஅளவு முழுவதும் அத்தொகை பராமரிக்கப்படும்.

பிணை வைப்புத் தொகை— 2 x L x LF x H x D x T

இவற்றுள்,

L = இணைக்கப்பட்ட மின்சுமை கிலோவாட்டில்

LF = சுமைக்காரணி— 0.5

H = ஒரு நாளிற்கான நேரம் — 8 மணி

D = மின்வழங்கல் விதித் தொகுப்பில், ஒழுங்குமுறை விதி 8(1)—ல் குறித்துரைக்கப்பட்ட பட்டியல் சுற்றுக் கால அளவு / பயன்பாட்டிற்காக உத்தேசிக்கப்பட்ட கால அளவு, இதில் எது குறைவோ, அதற்கான நாட்களின் எண்ணிக்கை.

T = தற்காலிக மின்வழங்கலுக்காக, ஆணையத்தினால் அவ்வப்போது குறித்துரைக்கப்பட்ட மின்கட்டண வீதம்.''

**25. ஒழுங்குமுறை விதி 45—இன், உள் ஒழுங்குமுறை விதி (1)—இல், கூறு (i) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:—**

“(i) ஒரு நிறுவல் தொகுப்புக்கு இணைப்புத் தர, உரிமம்தாரருக்கு மின்னளவிப் பலகை வரையுள்ள பொருள்களுக்கும் அவற்றின் போக்குவரத்துக்கும், அவற்றை நிறுவத் தேவைப்படும் உழைப்புக்கும் மேற்பார்வைக்கும் ஏற்படும் செலவுகளுடனான அடக்க விலையை, நுகர்வோர் வளாகத்தில் மின்னளவிப் பலகை வரையிலான பணிகளுக்கு, மின்மாற்றி / அதன் கட்டமைப்பு மற்றும் உபகரணங்களைத் தவிர்த்து, நுகர்வோருக்குக் கட்டணமாக விதிக்க உரிமை உண்டு.''

**26. ஒழுங்குமுறை விதி 45—இன், உள் ஒழுங்குமுறை விதி (1)—இல், கூறு (iii) பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:—**

“(iii) விண்ணப்பதாரர்களுக்கு மின்வழங்களுக்காக பயன்படுத்தப்படும் மின்மாற்றிகள், மின்விநியோக பெட்டிகள் (pillar boxes), மின்கம்பங்கள் உள்ளடக்கிய மின் இணைப்பு கம்பிகள் மற்றும் உபகரணங்களை மின்நுகர்வோரின் வளாகத்தின் வெளிப்புறப்பகுதியில் நிறுவப்படுவதற்கான செலவினம் உ.அ. (HT) மற்றும் தா.அ. (LT) மின்வகைக்கான மேம்பாட்டுக் கட்டணத்திற்குள் அடங்கும். மின் சுமை மற்றும் மின் இணைப்பின் வகைகளில் அடிப்படையில் உரிமம்தாரரால் உ.அ. (HT) மற்றும் தா.அ. (LT) வகையின் தனித்தனியான மின் கடத்திகள் மற்றும் புதை வடங்களுக்கான பொருட்கள் மற்றும் பணியாட்கள் வேலை நேர அளவின் சராசரி மின்கட்டண வீதப்படியான செலவினம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்தக் கட்டணம் ஆணையத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும். 110 கி.வோ. மற்றும் அதற்கு மேற்பட்ட அ.உ.அ. (EHT) வகைகளில், மின் இணைப்பு கம்பிகள் மற்றும்

உபகரணங்களை நிறுவுவதற்கான மேம்பாட்டுக் கட்டணங்கள் அல்லது மதிப்பீட்டுக் கட்டணங்கள், இவற்றில் எது அதிகமோ அதை நுகர்வோர் செலுத்த வேண்டும். நுகர்வோர் மூலம் ஏதேனும் பொருட்கள் வழங்கப்பட்டால் உரிமம்தாரர் அதற்கான செலவினத்தை நுகர்வோரின் கட்டணத்தில் கழிக்க வேண்டும்.''

**27. ஒழுங்குமுறை விதி 45–இல், உள்ஒழுங்குமுறை விதி (2)–இன் இறுதியில், பின்வருபவை சேர்க்கப்படும், அதாவது:–**

''மின்னளவியை அருகிலுள்ள மின்னிணைப்பு வழங்கும் மின் கம்பம் / மின் விநியோக பெட்டியுடன் இணைக்கும் மின் கம்பி / கம்பி வடம் உள்ளிட்ட மின் இணைப்பு பொருட்கள் நுகர்வோரால் வழங்கப்பட வேண்டும்.''

**28. கூறப்பட்ட விதித்தொகுப்பில், இணைப்பு–I–இல், ''இணைப்பு–I'' என்ற தலைப்பு ''பின்னிணைப்பு–I'' என்று படிக்கப்படும்.**

**29. இணைப்பு–I–இல், '' விதித்தொகுப்புத் தொடர் 6(3) பார்க்க '' என்ற சொற்றொடர் ''ஒழுங்குமுறை விதி 6(3) –யை பார்க்கவும் '' என்று மாற்றீடு செய்யப்படும்.**

**30. மேற்கூறிய விதித்தொகுப்பில், இணைப்பு–II –இல், ''இணைப்பு–II'' என்ற தலைப்பு ''பின்னிணைப்பு–II'' என்று படிக்கப்படும்.**

**31. இணைப்பு–II–இல், '' விதித்தொகுப்புத் தொடர் 6(3) பார்க்க '' என்ற சொற்றொடர் ''ஒழுங்குமுறைவிதி 6(3) –யை பார்க்கவும் '' என்று மாற்றீடு செய்யப்படும்.**

**32. மேற்கூறிய விதித்தொகுப்பில், இணைப்பு–III–இல், ''இணைப்பு–III: படிவங்கள்'' என்ற தலைப்பு ''பின்னிணைப்பு–III: படிவங்கள்'' என்று படிக்கப்படும்.**

**33. இணைப்பு III–இல், படிவம் 1 –இன், தலைப்பு பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது :–**

''புதிய அல்லது கூடுதல் மின்தேவைக்கான தா.அ. (L.T.) மின் இணைப்புக்கான விண்ணப்பப் படிவம்''

**34. இணைப்பு–III –இல், படிவம் 1–இன், 'குறிப்பில்' கூறு (iii) க்கு பிறகு, பின்வரும் கூறு சேர்க்கப்படும், அதாவது:–**

''(iv) விண்ணபதாரரின்(களின்) அடையாள (மத்திய / தமிழ்நாடு மாநில அரசால் வழங்கப்பட்டது) அட்டையின் நகல் ''

**35. இணைப்பு–III –இல், படிவம் 1A –இன், 'குறிப்பில்' கூறு (iv) க்கு பிறகு, பின்வரும் கூறு சேர்க்கப்படும், அதாவது:–**

''(v) விண்ணப்பதாரரின்(களின்) அடையாள (மத்திய / தமிழ்நாடு மாநில அரசால் வழங்கப்பட்டது) அட்டையின் நகல் ''

**36. இணைப்பு–III –இல், படிவம் 2 –இன், ''உள்ளடக்கம்'' வரிசை எண் 4 க்குப் பிறகு, பின்வருபவை சேர்க்கப்படும், அதாவது:–**

''(5) விண்ணப்பதாரரின்(களின்) அடையாள (மத்திய / தமிழ்நாடு மாநில அரசால் வழங்கப்பட்டது) அட்டையின் நகல் ''

**37. இணைப்பு–III இல், படிவம் 3 இன், 'குறிப்பு' மற்றும் அதன் தொடர்பான உள்ளீடுகள், பின்வருமாறு மாற்றீடு செய்யப்படும், அதாவது:–**

''குறிப்பு : விண்ணப்பதாரர் உரிமையாளராக இருப்பின், இந்த மின்சாரப் பகிர்மான விதித்தொகுப்பின் படிவம்–I –இல் உள்ள குறிப்பில் (i) மற்றும் (ii) இனங்களில் கூறப்பட்டுள்ள ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரார் உரிமையாளராக இல்லாத பட்சத்தில், இனம் (iii)–இல் கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். புறம்போக்கு நிலத்தில் வழங்கப்படும் மின்னிணைப்புகள், இவ்விதித்தொகுப்பின் 27–ஆம் ஒழுங்குமுறை விதியின் (12)–ஆம் உள் ஒழுங்குமுறை விதியின்படி ஆட்சிமை செய்யப்படும்.

அனைத்து வகையிலும், விண்ணப்பதாரர்(கள்) அடையான அட்டையின் (மத்திய / தமிழ்நாடு மாநில அரசால் வழங்கப்பட்டது) நகலை இணைக்க வேண்டும்.''

**38. இணைப்பு–III இல், படிவம் 4 இல், பொருள் எண். 9(a), 'குறிப்பில்' கூறு (2) க்குப் பிறகு, பின்வரும் கூறு சேர்க்கப்படும், அதாவது:–**

''(3) விண்ணப்பதாரரின்(கள்) அடையாள (மத்திய / தமிழ்நாடு மாநில அரசால் வழங்கப்பட்டது) அட்டையின் நகல் ''

**39. படிவம்–5 இல், ''கூறு 27(4) ஐப் பார்க்கவும்'' என்ற சொற்றொடர் ''ஒழுங்குமுறை விதி 27(4) யைப் பார்க்கவும்'' என்று மாற்றீடு செய்யப்படும்.**

**40. படிவம்–6 இல், ''கூறு 27(4) ஐப் பார்க்கவும்'' என்ற சொற்றொடர் ''ஒழுங்குமுறை விதி 27(4) யைப் பார்க்கவும்'' என்று மாற்றீடு செய்யப்படும்.**

**41. படிவம்–7 இல், ''கூறு 33(1) ஐப் பார்க்கவும்'' என்ற சொற்றொடர் ''ஒழுங்குமுறை விதி 33(1) யைப் பார்க்கவும்'' என்று மாற்றீடு செய்யப்படும்.**

**42. படிவம்–8 இல், ''கூறு 33(1) ஐப் பார்க்கவும்'' என்ற சொற்றொடர் ''ஒழுங்குமுறை விதி 33(1) யைப் பார்க்கவும்'' என்று மாற்றீடு செய்யப்படும்.**

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவின்படி)

சென்னை–600 032,
2024 ஆகஸ்ட் 22.

**சி. வீரமணி,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**விளக்க அறிக்கை**

தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித்தொகுப்பின் 51வது ஒழுங்குமுறை விதியின் கீழ் உருவாக்கப்பட்ட மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட விதித்தொகுப்பு மறுஆய்வுக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் இந்திய அரசின் மின்சார அமைச்சகம், மின்சாரம் (நுகர்வோர் உரிமைகள்) விதிகள், 2020 மற்றும் அதன் திருத்தங்களைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின்விநியோக விதித்தொகுப்பு, 2004–இன் தற்போதைய ஒழுங்குமுறை விதிகளில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியுள்ளது.

மின்பகிர்மான நீட்டிப்பு தேவைப்படாத நிலையில், உரிமம்தாரர் உத்தேசிக்கப்பட்ட நுகர்வோருக்கு மின்வழங்கலுக்கான கால வரம்பு ஒரு வாரமாக குறைக்கப்பட வேண்டியுள்ளது.

விவசாய மின்னிணைப்பிற்கான விண்ணப்பம் பதிவு செய்வதற்கும், மின்னிணைப்பு வழங்கலுக்கும் இடையே நீண்ட கால இடைவெளி இருப்பதால், பதிவின் ஆரம்ப நிலையிலேயே கிணறு / ஆழ்துளை கிணறு தோண்ட வேண்டி நிர்ப்பந்திக்க வேண்டிய அவசியம் இல்லை; உரிமம்தாரரால் சீரான முறையில் செயல்படுத்தும் விதமாக இது ஒழுங்குமுறை விதியில் பிரத்யேகமாக குறிப்பிடப்பட வேண்டியுள்ளது.

புதிய/கூடுதல்/தற்காலிக மின் இணைப்பை வழங்குவதற்கான விண்ணப்பத்தைப் பெறுதல், பதிவு செய்தல், ஒப்புகை, செயலாக்கம், பணத்தைத் திரும்பப் பெறுதல் போன்ற செயல்முறைகள் நுகர்வோரின் நலனுக்காக தெளிவாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் பிரத்யேகமான முறையில் ஏற்படுத்த வேண்டியுள்ளது.

சட்டப்பூர்வ கட்டிட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடத்தின் உயரத்தைக் கையாள்வதில் உள்ள தெளிவின்மையை நுகர்வோரின் நலன் கருதி தெளிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது.

ஒன்றுக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ள வளாகத்தில் மின்கட்டணவீதப்படி I–A இன் கீழ் உள்ள மின்னிணைப்புகளுடன் மின்கட்டணவீதப்படி I–D இன் கீழ் உள்ள மின்னிணைப்புகளும் இணைந்து நடைமுறைப்படுத்துவதில் உள்ள சட்டரீதியான விதிகளை, மின் கட்டண உத்தரவில் உள்ள வகைமுறையின்படி ஒழுங்குமுறைவிதியிலும் குறிப்பிடப்பட வேண்டியுள்ளது.

துணை மின்நிலையத்தை அமைப்பதற்கு நிலம் ஒதுக்கீடு செய்வதற்கான விதிமுறைகள் நடைமுறை நோக்கங்களுக்காகவும் மாறிவரும் நிலைமைகளுக்காகவும் திருத்தப்பட வேண்டியுள்ளது. நுகர்வோர் / மேம்பாட்டாளர் விருப்பம் மற்றும் வசதிக்கேற்ப, பல்வேறு வகையான துணை மின்நிலையங்களுக்கு ஏற்றவாறு பரந்த அளவிலான விருப்பத் தேர்விற்கேற்ப, மேம்பாட்டாளர் / நுகர்வோர் துணை மின்நிலையத்தை நிறுவுவதற்கு வழங்கக்கூடிய இடத்தின் அளவுகளை வகைப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

துணை மின்நிலையத்திற்காக வழங்கப்படும் நிலம், அத்தகைய திட்டங்களின் இறுதிப் பயனாளியாக இருக்கும் நுகர்வோரின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு, நுகர்வோர் / மேம்பாட்டாளரின் விருப்பத் தேர்வுக்கேற்ப தானமாகவோ அல்லது குத்தகைப் பத்திரம் மூலமாகவோ வழங்கப்படுவதற்கு உண்டான வழிவகையை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

வழக்கமான வகை துணை மின்நிலையங்கள் மற்றும் பிற வகை துணை மின்நிலையங்களுக்கு இடையேயான செலவில் உள்ள வேறுபாட்டைக் கணக்கிடுவதற்கு பின்பற்றப்படும் முறையானது, பல்பொருள் விளக்கம் மற்றும் சர்ச்சைக்கு வாய்ப்பில்லாமல், ஏகமனதாக நடைமுறைப்படுத்தலுக்கு ஏற்ப திட்டவட்டமானதாகவும் மற்றும் தெளிவாகவும் குறிப்பிடப்பட வேண்டியுள்ளது.

துணை மின்நிலையத்திற்கு நிலத்தை வழங்கும் தற்போதைய நிபந்தனை தொழில்துறை வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான கொள்கைகளுக்கு ஏற்ப, தகவல் தொழில்நுட்பம் தொழில்துறை நுகர்வோருக்கு விலக்கு அளிக்கப்பட வேண்டியுள்ளது.

மின்னளவியை இணைக்கும் மின் இணைப்பு கம்பி / கம்பிவடத்தை நிறுவி பராமரிக்கபடவேண்டிய நுகர்வோரின் கடமை தெளிவாக்கப்பட வேண்டியுள்ளது.

நுகர்வோரின் கோரிக்கைக்கு ஏற்ப மின்னிணைப்பினை நிரந்தரமாக மின் துண்டிப்பு செய்து அகற்றுவதற்கான செயல்முறை, வைப்புத் தொகையைத் திரும்பப் பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் அதன் கால வரம்புகள் திட்டவட்டமானதாக குறிப்பிடப்பட வேண்டியுள்ளது.

தவறான புரிதலுக்கான வாய்ப்பைக் களையவும் மற்றும் நுகர்வோர் உரிமம்தாரரால் தேவையற்ற முறையில் நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்படுவதால் ஏற்படும் தேவையற்ற வழக்குகளை தவிர்க்கும் பொருட்டும், மேம்பாட்டுக் கட்டணங்கள், பொருந்தக்கூடிய தன்மை மற்றும் அதன் கட்டாய அமலாக்கம் ஆகியவற்றின் கருத்துப்படிவம் மிகவும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் குறிப்பிடப்பட வேண்டியுள்ளது.

இதன்படி, இந்தத் திருத்தம், மேற்கண்ட விதிகளை ஆணையத்தின் விதிமுறைகளில் இணைத்துக்கொள்ள விழைகிறது.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவின்படி)

சென்னை–600 032,
2024 ஆகஸ்ட் 22.

**சி. வீரமணி,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

## இணைப்பு

## தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பு

| வ எண் | இருந்துவரும் வகைமுறை | திருத்தப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| 1. | **2. வரையறைகள்**<br>(a) to (dd) xxx<br>இந்த விதித்தொகுப்பிலும் சட்டத்திலும் அல்லது பொதுச் சட்டத்தொடர் சட்டம், 1897 (மையச்சட்டம் 1897 ல் 10) இலும் வரையறுக்கப்படாமல் பயன்படுத்தப்படும் சொற்களும் சொற்றொடர்களும் பொறியியல் மற்றும் வணிக வட்டங்களில் புரிந்து கொள்ளப்படும் பொருள்களைக் குறிக்கும். | **2. வரையறைகள்**<br>(a) to (dd) xxx<br>இந்த விதித்தொகுப்பிலோ அல்லது உரிய சட்டத்திலோ அல்லது மின்சாரம் நுகர்வோர் உரிமைகள் விதிகள், 2020–லோ அல்லது ஆணையத்தின் வேறு ஏதேனும் ஒழுங்குமுறை விதிகள் அல்லது பொது வகையங்கள் விளக்கச் (general clause) சட்டம், 1897–லோ (1897 ஆண்டின் 10 வது மத்திய சட்டம்) வரையறுக்கப்படாமல் பயன்படுத்திய சொற்களும் வாக்கியங்களும் நடப்பில் உள்ள பொறியியல் மற்றும் வணிகவியல் துறைகளின் பேச்சு வழக்கில் புரிந்து கொள்ளப்படும் அதே பொருள்களை குறிக்கும். |
| 2. | **6(3) மின் சுமைத் தகவல்கள்**<br>மின் செலுத்துகை அமைப்புடன் இணைந்த புள்ளிகளில் உள்ள மின்னளவு எடுக்கும் தகவல்களிலிருந்து உரிமம்தாரர், தனது மின்னூட்டும் பகுதிக்கான மின் சுமை வளைவுகளை உருவாக்குவதோடு தனது பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படும் புள்ளியில் உள்ள தக்க விரிவுக் காரணியைப் பயன்படுத்தி அமைப்புக்கான சுமை வளைவையும் உருவாக்க வேண்டும். ஏதாவது குறிப்பிட்டகாலப் பருவத்திற்கான அமைப்பின் இழப்புகளை, மின்னளவு எடுக்கும் தகவல் தொகுப்புடன் உண்மையான மின் ஆற்றல் விற்பனை அளவைக் கருதி தோராயமாகக் கண்டறியலாம். இத்தகவலை ஆண்டுதோறும் மாமிசெப(STU) நிறுவனத்திற்கும் ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டும். 1 மெ.வா அல்லது அதற்கும் மேலுள்ள மின் தேவைக்கான இணைப்பைக் கேட்கும் நுகர்வோர்கள் இணைப்பு–1 இல் விவரித்து உள்ள தகவல்களை உரிமதாருக்குத் தரவேண்டும். எந்தவொரு தனிப்புள்ளியிலும் 1 மெ வா அல்லது அதற்கும் மேலமைந்த சுமைகளுக்கு ஒப்பந்தம் செய்ய விரும்பும் நுகர்வோர்களைப் பொருத்த வரையில் உண்மையாக நிலவும் மின் சுமைகளைக் கண்காணிக்க தனிவிழிப்போடு உரிமம்தாரர் செயல்பட வேண்டும். நுகர்வோர் இணைப்பு கோரியதும், உரிமதாரர் இணைப்பு II இல் விவரித்துள்ளபடி உரிய அமைப்புக்கான விவரங்களைத் தரவேண்டும். ஒவ்வோராண்டிலும் ஆறு மாதத்துக்கு ஒரு முறையாவது அமைப்புத் தகவல்களை அது நாள் வரையிலான புதுத்தகவல்களைக் கொண்டு திருத்தம் செய்ய வேண்டும். | **6(3) மின் சுமைத் தகவல்கள்**<br>மின் செலுத்துகை அமைப்புடன் இணைந்த புள்ளிகளில் உள்ள மின்னளவு எடுக்கும் தகவல்களிலிருந்து உரிமம்தாரர், தனது மின்னூட்டும் பகுதிக்கான மின் சுமை வளைவுகளை உருவாக்குவதோடு தனது பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படும் புள்ளியில் உள்ள தக்க விரிவுக் காரணியைப் பயன்படுத்தி, அமைப்புக்கான சுமை வளைவையும் உருவாக்க வேண்டும். ஏதாவது குறிப்பிட்டகாலப் பருவத்திற்கான அமைப்பின் இழப்புகளை, மின்னளவு எடுக்கும் தகவல் தொகுப்புடன் உண்மையான மின் ஆற்றல் விற்பனை அளவைக் கருதி தோராயமாகக் கண்டறியலாம். இத்தகவலை ஆண்டுதோறும் மாமிசெப (STU) நிறுவனத்திற்கும் ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டும். 1 மெ.வா அல்லது அதற்கும் மேலுள்ள மின் தேவைக்கான இணைப்பைக் கேட்கும் நுகர்வோர்கள் பின்னிணைப்பு–1 இல் விவரித்து உள்ள தகவல்களை உரிமதாருக்குத் தரவேண்டும். எந்தவொரு தனிப்புள்ளியிலும் 1 மெ வா அல்லது அதற்கும் மேலமைந்த சுமைகளுக்கு ஒப்பந்தம் செய்ய விரும்பும் நுகர்வோர்களைப் பொருத்த வரையில் உண்மையாக நிலவும் மின் சுமைகளைக் கண்காணிக்க தனிவிழிப்போடு உரிமம்தாரர் செயல்பட வேண்டும். நுகர்வோர் இணைப்பு கோரியதும், உரிமம்தாரர் பின்னிணைப்பு II இல் விவரித்துள்ளபடி உரிய அமைப்புக்கான விவரங்களைத் தரவேண்டும். ஒவ்வோராண்டிலும் ஆறு மாதத்துக்கு ஒரு முறையாவது அமைப்புத் தகவல்களை அது நாள் வரையிலான புதுத்தகவல்களைக் கொண்டு திருத்தம் செய்ய வேண்டும். |

| *வ எண்* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தப்பட்ட வகைமுறை* |
|---|---|---|
| 3. | **27. மின் ஆற்றல் வழங்கலுக்கான கேட்புகள்**<br><br>(1) கேட்கப்படும்போது மின் வழங்கல் தருதல் பற்றி அந்த சட்டத்தின் 43 ஆவது சட்டப்பிரிவில் உள்ள, உரிமதாரரின் கடமைகள் பற்றிய விதி வகுப்பு அப்படியே கீழே மீளத் தரப்படுகிறது.<br><br>“(1) ஒரிருப்பிடத்தின் உரிமையாளரோ அல்லது பொறுப்பேற்றிருப்பவரோ அவ்விடத்திற்கு மின் வழங்கலைத் தருமாறு விண்ணப்பம் கொடுத்து வேண்டினால், இந்தச் சட்டத்தில் வேறுவிதமாக வகை செய்யப்பட்டவாறல்லாமல் ஒவ்வொரு உரிமதாரரும் அத்தகைய மின் வழங்கலை வேண்டிக் கேட்ட விண்ணப்பத்தைப் பெற்ற ஒரு மாதத்துக்குள் மின் வழங்கலை அந்த இருப்பிடத்துக்குத் தரவேண்டும்.<br><br>இருந்தாலும், அத்தகைய மின் வழங்கலுக்குப் பகிர்மான வாயில் நீட்டித்தோ அல்லது புதிய துணைமின் நிலையம் இயக்கி வைத்தலோ தேவைப்பட்டால், அத்தகைய பகிர்மான வாயில் நீட்டித்தல் அல்லது புதிய துணைமின் நிலையம் இயக்கி வைத்தல் முடிந்தவுடனேயோ அல்லது தகுந்த ஆணையம் குறிப்பிடும் அத்தகைய கால இடைவெளிக்குள்ளோ உரிமதாரர் மின்வழங்கலைத் தரவேண்டுமென விதிக்கப்படுகிறது.<br><br>அத்தோடன்றி அத்தகைய மின் வழங்கல் தரவேண்டிய ஊரிலோ, சிற்றூரிலோ , அப்பகுதியிலோ மின்சார வழங்கலேதும் இல்லாத போது, ஆணையம், குறிப்பிட்ட கால இடைவெளியை, அவ்வூர் அல்லது அச்சிற்றூர் அல்லது அப்பகுதி மின் மயமாக்கப்படும் வரையில் நீட்டிக்கலாம்.<br><br>விளக்கம்: இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக “விண்ணப்பம்’’ என்பது அவசியமான கட்டணச் செலுத்துகையை மற்றும் பிற இணங்குகைகளைக் காட்டுகிற ஆவணங்களுடன் சேர்த்து பகிர்மான உரிமதாரரால் வேண்டுறுத்தப்படுகின்றவாறு உரிய படிவத்திலுள்ளதும் அணைத்து வகைகளிலும் நிறைவான விண்ணப்பம் என்று பொருள்படும்<br><br>(2) தேவைப்படும் போது, உட்பிரிவு (1) இல் குறிப்பிட்டுள்ள இருப்பிடத்துக்கு மின் வழங்கலைத் தருவதற்காக மின் எந்திரத் தொகுப்பையோ மின் தொடரையோ அமைப்பது ஒவ்வொரு உரிமதாரரின் கடமையாகும்.<br><br>எனினும், உரிய ஆணையம் தீர்மானித்த உரிய விலையை உரிமதாரருக்குச் செலுத்த இசைவு தந்தாலொழிய, ஏற்கனவே தனி மின்வழங்கல் பெற்றுள்ள இடத்துக்கு எவரும், மின்சாரம் வழங்கும்படி உரிமதாரரிடம் உரிமையோடு கேட்கவோ அல்லது அவரிடமிருந்து தொடர்ந்து மின்சாரம் பெற்றுக் கொண்டிருக்கவோ முடியாது.<br><br>(3) உட்பிரிவு (1) இல் குறிப்பிட்டுள்ள கால இடைவெளிக்குள் உரிமதாரர் மின் வழங்கலைத் தரத் தவறினால், தவறிய நாளிலிருந்து நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்கக்கூடிய தண்டத்தொகையைக் கட்ட உரியவராவார்‘‘.<br><br>ஆனால் உரிமதாரரர் எந்த நுகர்வோர் பெயரிலுள்ள பிறமின்னிணைப்பு எதனையும் பொறுத்து உரிமதாரருக்கு நிலுவைகளை செலுத்தத் தவறுகை செய்கிறாரோ, அந்த நுகர்வோருக்கு மின்சாரம் வழங்குவதற்கு மறுத்தல் வேண்டும். | **27. மின்சாரம் வழங்கலுக்கான கேட்புகள்**<br><br>(“(1). மின்வழங்கலுக்கான உரிமம்தாரரின் கடமைகள் கீழ்வருமாறு:<br><br>(அ) ஒவ்வொரு மின்பகிர்மான உரிமம்தாரரும் எந்தவொரு இருப்பிடத்துக்கான சொந்தக்காரராலோ அல்லது அதில் குடியிருப்பவராலோ விண்ணப்பம் அளித்து அவ்விருப்பிடத்திற்கு மின்வழங்கல் வேண்டினால் அத்தகைய இருப்பிடத்திற்கு மின்வழங்கல் வேண்டிய விண்ணப்பத்தைப் பெற்ற ஒரு வார காலத்திற்குள் மின்வழங்கல் தரப்பட வேண்டும்.<br><br>அவ்வாறான மின்வழங்கலை தரும்பொருட்டு, புதிய மின்பகிர்மான மின்வாயில் நீட்டிப்போ அல்லது புதியதுணைமின் நிலைய துவக்கிவைப்போ தேவைப்பட்டால், அந்த மின்பகிர்மான உரிமம்தாரர் அத்தகைய இருப்பிடத்திற்கு, உரிய நீட்டிப்போ அல்லது துவக்கிவைப்போ முடிந்த உடனடியாகவோ, அல்லது இந்த ஒழுங்குமுறை விதித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள்ளோ, மின்வழங்கல் தரப்பட வேண்டும்.<br><br>மேலும் அவ்விருப்பிடம், மின்சார வழங்கல் ஏதும் இல்லாத கிராமமாகவோ அல்லது சிற்றூராகவோ அல்லது அந்தப் பகுதிக்கு மின்வழங்கல் வசதியோ இல்லாதபோது, ஆணையம் செப்பியபடி அவ்வூர் அல்லது அச்சிற்றூர் அல்லது அந்தப் பகுதிக்கு மின்மயமாக்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டிய தேவைகளை கருத்தில் கொண்டு மேற்சொன்ன மின் வழங்கும் காலத்தை நீட்டிக்கலாம்.<br><br>**விளக்கம்:**<br><br>(அ) இந்த உள்ஒழுங்குமுறை விதியின் நோக்கங்களின் படி ‘விண்ணப்பம்’ என்பது<br><br>மின்பகிர்வு உரிமம்தாரரால் தேவைப்படலாகும் உரிய கட்டணங்களைச் செலுத்தியதற்கான ஆவணங்களையும் மற்றும் பிற இணக்கங்களையும் காட்டும் ஆவணங்களுடன் பொருத்தமான படிவத்தில் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமாகும்.<br><br>(ஆ) மின்வழங்கல் தேவைப்படும் இருப்பிடத்திற்கு அத்தகைய மின்வழங்கலைத் தருவதற்கு, மின்கலனோ (அ) மின்தொடரோ தேவைப்பட்டால், அதை செய்து தர வேண்டியது ஒவ்வொரு மின்பகிர்மான உரிமம்தாரரின் கடமையாகும்.<br><br>இருந்தபோதிலும், ஆணையத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் உரிய விலையை அல்லது கட்டணத்தை அந்நுகர்வோர் உரிமம்தாரருக்குச் செலுத்த இசைந்தாலொழிய எவரும் சொந்த இடத்திலோ அல்லது குடியிருக்கும் இடத்திலோ உரிமம்தாரரிடமிருந்து மின்சாரத்தை வழங்குமாறு கேட்பதற்கோ (அ) தொடர்ந்து பெறுவதற்கோ உரிமை கோர முடியாது.<br><br>(இ) ஒரு மின்பகிர்மான உரிமம்தாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் மின்சாரம் வழங்கத் தவறினால், திருத்தம் செய்யப்பட்ட ஒழுங்குமுறையின் 21–வது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்க விண்ணப்பதாரருக்கு உரியத்தொகை செலுத்த வேண்டும்.<br><br>எனினும் தனது பெயரிலுள்ள வேறு ஏதேனும் மின்இணைப்பு தொடர்பாக உள்ள நிலுவைத்தொகையை விண்ணப்பதாரர் செலுத்தத் தவறிய நிலையில் மின்பகிர்மான உரிமம்தாரர் அவ்விண்ணப்பதாரருக்கு மின்சாரம் வழங்க மறுப்பார்.’’ |

| வ எண் | இருந்துவரும் வகைமுறை | திருத்தப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| 4. | 27 (2)<br>(a) வேளாண்மை வகையின மின் வழங்கலுக்கு, இணைப்பு – III இல் உள்ள படிவம்–2 இல் விண்ணப்பத்தைத் தரவேண்டும். வேளாண்மை வகையினத்தைப் பொருத்தவரையில் (சட்டத்தின் 86 ஆம் சட்டப்பிரிவில் உள்ள துணைப்பிரிவு (4) இன்படி) இப்பொருள் தொடர்பாகத் தேசிய மின்சாரக் கொள்கை வழிகாட்டுதலையும், சட்டத்தின் 108 ஆவது சட்டப்பிரிவில் உள்ள துணைப்பிரிவு (1) இன்படி, மாநில அரசு பொதுமக்கள் நலங்கருதி வெளியிடும் கொள்கை நெறிகாட்டுதலையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும். | 27 (2)<br>(a) வேளாண்மை வகையின மின் வழங்கலுக்கு, பின்னிணைப்பு–III இல் உள்ள படிவம்–2 இல் விண்ணப்பத்தைத் தரவேண்டும். வேளாண்மை வகையினத்தைப் பொருத்தவரையில் (சட்டத்தின் 86 ஆம் சட்டப்பிரிவில் உள்ள துணைப்பிரிவு (4) இன்படி) இப்பொருள் தொடர்பாகத் தேசிய மின்சாரக் கொள்கை வழிகாட்டுதலையும், சட்டத்தின் 108 ஆவது சட்டப்பிரிவில் உள்ள துணைப்பிரிவு (1) இன்படி, மாநில அரசு பொதுமக்கள் நலங்கருதி வெளியிடும் கொள்கை நெறிகாட்டுதலையும் அடிப்படையாகக் கொள்ள வேண்டும். |
| 5 | 27 (2)<br>(b) விண்ணப்பம் முறைப்படியானதாக இருக்கும்போது, அது பதிவு அலுவலரால்வரிசை கிரம எண்ணோடு பதிவு செய்தல் வேண்டும் மற்றும் விண்ணப்பதாரரிடமிருந்து எழுத்து வடிவில் உரிய முறையிலான ஒப்புகையைப் பெற்று அவர் வரிசை கிரம எண்ணோடு பதிவு செய்யப் பட்டுள்ளார் என்பதை விண்ணப்பதாரருக்குத் தெரிவித்தல் வேண்டும். | 27 (2)<br>(b) விண்ணப்பம் முறைப்படியானதாக இருக்கும்போது, அது பதிவு அலுவலரால்வரிசை கிரம எண்ணோடு பதிவு செய்தல் வேண்டும் மற்றும் விண்ணப்பதாரரிடமிருந்து எழுத்து வடிவில் உரிய முறையிலான ஒப்புகையைப் பெற்று அவர் வரிசை கிரம எண்ணோடு பதிவு செய்யப் பட்டுள்ளார் என்பதை விண்ணப்பதாரருக்குத் தெரிவித்தல் வேண்டும்.<br>விண்ணப்பம் பதிவின் போது விண்ணப்பதாரரின் நிலத்தில் ஏற்கனவே கிணறு / ஆழ்துளை கிணறு இல்லாத பட்சத்தில், கிணறு / ஆழ்துளை கிணறு தோண்ட வேண்டும் என்று ஆரம்ப கட்டத்திலேயே நிர்பந்திக்கக் கூடாது. |
| 6 | 27 (2)<br>(c) விண்ணப்பதாரரின் முறை, வரிசை கிரம எண் வரிசையில் வரும்போது, உரிமதாரர், கிணற்றின் மற்றும் நிலத்தின் உடைமையுரிமை குறித்து விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், நில அளவைப் புல எண்கள் ஆகியவை அந்தத்தேதியில் மாறாமல் உள்ளதா என்று கண்டறிவதற்கு விண்ணப்பதாரருக்கு 90 நாட்கள் அறிவிப்பு வழங்குதல் வேண்டும். அறிவிப்பைப் பெற்றுக் கொண்டதற்காக விண்ணப்பதாரரிடமிருந்து உரிய ஒப்புகையைப் பெற்று பாதுகாத்தல் வேண்டும். நீர் இறைப்பி (motor pump set), மின்கொண்மி (capacitor) ஆகியவை இந்த நிலையில் வற்புறுத்தப்படமாட்டாது. விண்ணப்பதாரரிடமிருந்து விவரங்களைப் பெற்றதன் பேரில், பிரிவு அலுவலர், விவரங்களை உறுதி செய்வதற்காக கள ஆய்வு செய்தல் வேண்டும்; மற்றும் பிரிவு அலுவலகத்தில் உள்ள ஆயத்த நிலைப் பதிவேட்டில் அந்த விவரங்களைப் பதிதல் வேண்டும். ஆயத்த நிலைப் பதிவேட்டில் விவரங்களைப் பதிவு செய்யும் தேதி மதிப்பீட்டைத் தயார் செய்வதற்கு உண்டான வரிசை கிரம எண்ணாக கடைபிடிக்கப்படும்.<br>(d) லிருந்து (h) வரை XXX | 27 (2)<br>(c) விண்ணப்பதாரரின் முறை, வரிசை கிரம எண் வரிசையில் வரும்போது, உரிமம்தாரர், இருக்கின்ற (அ) முன்மொழிகின்ற கிணறு / ஆழ்துளைக் கிணறு மற்றும் நிலத்தின் உடைமையுரிமை, நில அளவைப் புல எண்கள் பற்றி விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விவரங்கள் அந்தத் தேதியில் மாறாமல் உள்ளதா என்று கண்டறிவதற்கு விண்ணப்பதாரருக்கு 90 நாட்கள் அறிவிப்பு வழங்குதல் வேண்டும். அறிவிப்பைப் பெற்றுக் கொண்டதற்காக, விண்ணப்பதாரரிடமிருந்து உரிய ஒப்புகையைப் பெற்று பாதுகாத்தல் வேண்டும். மின்னோடி நீர் இறைப்பி (motor pump set), மின்கொண்மி (capacitor) ஆகியவை இந்த நிலையில் வற்புறுத்தக்கூடாது. மின்னோடி நீர் இறைப்பி (motor pump set), மின்கொண்மி (capacitor) போன்றவற்றை நிறுவி மின்சுருளுடன் இணைப்பு செய்து கிணறு / ஆழ்துளைக் கிணறு தயார் செய்யப்பட்ட பிறகு, விண்ணப்பதாரர் பிரிவு அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆயத்த நிலைப் பதிவேட்டில் தேதியிட்ட கையொப்பத்துடன் விவரங்களை பதிய வேண்டும். அத்தகைய பதிவின் தேதியிட்ட வரிசை கிரம எண்ணின்படி, கிணறு / ஆழ்துளைக் கிணற்றின் விவரங்கள் மற்றும் இருப்பை உறுதிப்படுத்துவதற்காக பிரிவு அலுவலர் கள ஆய்வு செய்து, மூன்று நாட்களுக்குள் தனது தேதியிட்ட கையொப்பத்துடன் ஆயத்த நிலைப் பதிவேட்டில் பதிய வேண்டும்.<br>ஆயத்த நிலைப் பதிவேட்டில் விண்ணப்பதாரரால் விவரங்களைப் பதிவு செய்யும் தேதி, மதிப்பீட்டைத் தயார் செய்வதற்கு உண்டான மூப்பு வரிசையாக கடைபிடிக்கப்படும்.<br>(d) லிருந்து (h) வரை XXX |

| வ எண் | இருந்துவரும் வகைமுறை | திருத்தப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| 7 | 27 (2)<br>(i) நுகர்வோராகக்கூடிய வாய்ப்புடையவர், அறிவிப்பு கால அளவிற்குள் அவருக்கு நிறுவுகையை நிறுவி மின்வழங்கலை பெறுவதற்கு அவருடைய ஆயத்த நிலை பற்றி அறிக்கை அளிக்க வேண்டும்; மற்றும் நீர் இறைப்பி மற்றும் மின்கொண்மி பற்றிய விவரங்களை அளித்தல் வேண்டும். இந்த விதித்தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ள \|\|\|–ஆம் இணைப்பின் 7–ஆம் படிவத்திலுள்ள ஒப்பந்தத்தை எழுதிக்கொடுத்தல் வேண்டும்.<br>(j) லிருந்து (k) வரை xxx | 27 (2)<br>(i) நுகர்வோராகக்கூடிய வாய்ப்புடையவர், அறிவிப்பு கால அளவிற்குள் அவருக்கு நிறுவுகையை நிறுவி மின்வழங்கலை பெறுவதற்கு அவருடைய ஆயத்த நிலை பற்றி அறிக்கை அளிக்க வேண்டும்; மற்றும் நீர் இறைப்பி மற்றும் மின்கொண்மி பற்றிய விவரங்களை அளித்தல் வேண்டும். இந்த விதித்தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ள \|\|\|–ஆம் பின்னிணைப்பின் 7–ஆம் படிவத்திலுள்ள ஒப்பந்தத்தை எழுதிக்கொடுத்தல் வேண்டும்.<br>(j) லிருந்து (k) வரை xxx |
| 8 | 27<br>(3) உயர் அழுத்த மின்னிணைப்பிற்கான விண்ணப்பம், படிவம்–4 இல் இருத்தல் வேண்டும். தற்காலிக மின்வழங்கல், வேளாண் மற்றும் குடிசை அல்லாத பிற தாழ்வழுத்த மின்னிணைப்பிற்கான விண்ணப்பம், தற்காலிக மின்னிணைப்பு, தாழ்வழுத்த குடிசை மின்னிணைப்பு முறையே படிவம் 1, 1A, 2 மற்றும் 3 இன் வடி இருத்தல் வேண்டும்.<br>விளக்கம்:<br>(1) உயரழுத்த / தாழ்வழுத்த மின் வழங்கல் வகையினங்களுக்கான வேண்டுகோள்கள் (விண்ணப்பங்கள்) நேரில் ஒப்படைக்கப்பட வேண்டும் அல்லது அஞ்சல் வழியாக அனுப்பப்பட வேண்டும் அல்லது உரிமதாரரின் வலைதள பக்கம் (web portal) மூலமாக இணையதளத்துடன் இணைந்த நிலையில் (online) அனுப்பப்பட வேண்டும். முழுமையாக இல்லாமலிருந்தாலும், எழுத்து மூலமாக / மின்னஞ்சல் மூலமாக ஒப்புகையளிக்கப்படுதல் வேண்டும். இணையதளத்துடன் இணைந்துள்ள நிலையில் மின் வழங்கல் கோரும் விண்ணப்பம் செய்யப்பட்ட இனங்களில் ஒப்புகைச் சீட்டினை இணையதளப் பக்கத்திலிருந்து தானே உருவாக்கலாம். அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களுக்கு, மின்னஞ்சல் வழியான ஒப்புகையுடன், உரிமதாரர் அதனுடைய விருப்பத்தேர்வில் குறுஞ்செய்தி (sms) மூலமாக தெரிவிக்கலாம்.<br>(2) உயரழுத்த வகையின மின் வழங்கலின் கீழான விண்ணப்பங்கள் தொடர்புடைய முறையான ஆவணங்களுடன் இருக்குமானால், தேவையான கட்டணங்கள் செலுத்தும் நேர்வில் அவை பதிவு செய்யப்படுதல் வேண்டும். அவை முழுமையாக நிரப்பப்படாமலிருந்தால் குறைபாடுகளை சுட்டிக்காட்டி பதிவு செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்படுதல் வேண்டும். தாழ்வழுத்த வகையின மின் வழங்கலுக்கு, பதிவுக் கட்டணங்கள் செலுத்தப்படின் விண்ணப்பங்கள் முதலில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். தேவையான ஆவணங்களுடனான விண்ணப்பம் முழுமையாக இல்லாவிடில், குறைபாடுகள் சுட்டிக்காட்டி அறிவிப்பு பெறப்பட்ட ஏழு தினங்களில் குறைபாடுகளை சரி செய்து மீள சமர்ப்பிக்குமாறும் தவறும் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் தெரிவித்து அறிவிப்பு அனுப்பப்பட வேண்டும். | 27<br>(3) உயர் அழுத்த மின்னிணைப்பிற்கான விண்ணப்பம், படிவம்–4 இல் இருத்தல் வேண்டும். புதிய (அ) கூடுதல் தேவைக்கான தாழ்வழுத்த மின்னிணைப்பு (தற்காலிக மின்வழங்கல், விவசாய மற்றும் குடிசை தவிர), தற்காலிக மின்னிணைப்பு, தாழ்வழுத்த விவசாய மின்னிணைப்பு, தாழ்வழுத்த குடிசை மின்னிணைப்பு, முறையே படிவம் 1, 1A, 2 மற்றும் 3–இன் படி இருத்தல் வேண்டும்.<br>விளக்கம்:<br>(அ) விண்ணப்பதாரர் தன்னுடைய விருப்பத்தின் பேரில் விண்ணப்பத்தை நேரில் ஒப்படைக்கவோ அல்லது மின்பகிர்மான உரிமம்தாரரின் இணையதள முகப்பிலோ (web portal) அல்லது கைபேசி செயலி (mobile app ) மூலமாகவோ விண்ணப்பிக்கலாம். நிகழ்நிலையில் செய்யப்படும் விண்ணப்பங்களுக்கு, விண்ணப்பத்தை சமர்ப்பித்தவுடன் பதிவு எண்ணுடன் கூடிய ஒப்புகை உருவாக்கப்பட்டு விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்படும்.<br>(ஆ) நேரில் ஒப்படைக்கப்பட்ட விண்ணப்பம் பெறப்பட்டவுடன் உரிமம்தாரரால் ஊடுகதிர் (scan) மூலம் பதிவிடப்பட்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். விண்ணப்பத்தின் பதிவு எண்ணுடன் கூடிய ஒப்புகை உருவாக்கப்பட்டு விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்படும்.<br>(இ) உயரழுத்த வகையினங்களுக்கு, தேவையான கட்டணங்கள் செலுத்தும் நேர்வில் அவை பதிவு செய்யப்படும். விண்ணப்பம் முழுமையாக இல்லாத பட்சத்தில், குறைபாடுகளை சுட்டிக்காட்டி பதிவு செய்யப்படாமல் ஏழு நாட்களுக்குள் திருப்பி அனுப்பப்படும்.<br>தாழ்வழுத்த வகையினங்களுக்கு, பதிவுக் கட்டணங்கள் செலுத்தப்படின் விண்ணப்பங்கள் முதலில் பதிவு செய்யப்படும். தேவையான ஆவணங்களுடனான விண்ணப்பம் முழுமையாக இல்லாவிடில், குறைபாடுகளை சரி செய்து மீண்டும் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரருக்கு மூன்று நாட்களுக்குள் அறிவிப்பு அனுப்பப்படும்.<br>இரு வகையினங்களுக்கும் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள், அறிவிப்பு பெறப்பட்ட ஏழு தினங்களுக்குள் விண்ணப்பதாரரால் சரி செய்யப்பட்டு மீண்டும் சமர்ப்பிக்கப்படவேண்டும், தவறும் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.<br>(ஈ) குறைப்பாடுகள் சரிசெய்யப்பட்டு விண்ணப்பம் மீண்டும் சமர்ப்பிக்கப்படும் போது, அதற்கு ஒப்புகை அளிக்கப்படும். குறிப்பிட்ட நேரத்திற்குள் மீண்டும் சமர்ப்பிக்கப்படாவிட்டால், விண்ணப்பதாரருக்கு உரிய அறிவிப்புடன் விண்ணப்பம் ரத்துசெய்யப்பட்டு, கட்டணங்கள் ஏதேனும் செலுத்தப்பட்டிருப்பின் |

| வ எண் | இருந்துவரும் வகைமுறை | திருத்தப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| | | அவற்றில் பதிவுக் கட்டணங்கள் தவிர மற்றவை விண்ணப்பதாரருக்கு திருப்பியளிக்கப்படும். விண்ணப்பத்தை ரத்து செய்தவுடன், நிகழ்நிலையில் கட்டணத்தை திருப்பி செலுத்துவதற்கேற்ப விண்ணப்பதாரர் தனது வங்கிக் கணக்கின் விவரங்களை உரிமம்தாரருக்குத் தெரிவிக்கவேண்டும். உரிமம்தா ரர் அத்தகைய தகவல் பெறப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் விண்ணப்பதாரரின் வங்கி கணக்கில் வரவு வைக்கும் வகையில் கட்டணத்தை திருப்பி செலுத்த வேண்டும்.<br>(உ) தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்களுடன் அனைத்து விவரங்களுடன் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு தயாரிக்கப்பட்ட ஒப்புகை தேதி, விண்ணப்பம் பெறப்பட்ட நாளாகக் கருதப்படும்.<br>(ஊ) அனைத்து வகைகளுக்கும், விண்ணப்பம் பெறப்பட்ட பிறகு பணி நாட்களில் இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் ஒப்புகை தயாரிக்கப்படும் அல்லது அனுப்பப்படும்<br>(எ) மின்னிணைப்பு வழங்கும் வரை விண்ணப்பத்தின் செயலாக்க நிலையை கண்காணிக்கும் பொருட்டு இணையதளம் செயலி அல்லது கைபேசி செயலி அல்லது குறுஞ்செய்தி அல்லது மற்ற வகையிலான முறையில், தனிப்பட்ட பதிவு எண்ணின் அடிப்படையிலான விண்ணப்பக் கண்காணிப்பு இயக்கமுறையை உரிமம்தாரர் நிறுவுதல் வேண்டும்<br>(ஏ) அனைத்து வகை விண்ணப்பங்களும் மாநில / மத்திய அரசால் வழங்கப்பட்ட விண்ணப்பதாரரின் அடையாளச் சான்றிதழுடன் உரிய விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பிற தேவைப்படும் ஆவணங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.<br>(ஐ) புதிய மின் இணைப்புக்கான விண்ணப்பப் படிவம் கூடுதல் மின் தேவைக்கும் பொருந்தும். புதிய மின் இணைப்புக்குத் தேவைப்படும் பாதுகாப்பு முறை மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஆவணங்கள் கூடுதல் மின் தேவைக்கும் பொருந்தும்.<br>(ஒ) உரிமம்தாரர் நிகழ்நிலை முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கைபேசி செயலியை உருவாக்க வேண்டும். |

| வ எண் | இருந்துவரும் வகைமுறை | திருத்தப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| 9 | 27<br>4) இருப்பிடத்துக்குச் சொந்தக்காரராக இல்லாமல் மின்வழங்குல் கேட்கும் நுகர்வோராக விருப்பமுள்ளவர், அதைப்பெற இந்த விதித்தொகுப்பின் இணைப்பு \|\|\| இல் உள்ள படிவம்–5 இன் படியான சம்மதக் கடிதத்தை இருப்பிட உரிமையாளரிடமிருந்து பெற்றுத் தரவேண்டும். சொந்தக்காரர் கிடைக்கவில்லையென்றாலோ அல்லது சம்மதக் கடிதம்–தர மறுத்துவிட்டாலோ, நுகர்வோராக விருப்பமுள்ளவர் அந்த இருப்பிடத்தில் குடியிருப்பதற்கான செல்லத்தக்க சான்றை தரவேண்டும். மேலும், இவ்விதியின் இணைப்பு \|\|\| இல் உள்ள படிவம் –6 இன் படியான காப்புறுதி பத்திரத்தின் வாயிலாக, குடிமிருப்பவருக்கு மின்னிணைப்பு வழங்கலால் உருவாகும் தகராறுகளால் உரிமம்தாரருக்கு விளையும் இழப்புக்குக் காப்புறுதி தந்து, மேலும் இயல்பான காப்புறுதித் தொகையைப் போல இரட்டிப்பு மடங்குத் தொகையை காப்புறுதித் தொகையாகச் செலுத்தவும் உறுதியேற்க வேண்டும்.<br>**விளக்கம்:-**<br>இந்த உள்ஒழுங்குமுறை விதிக்காக, "செல்லத்தக்க சான்று" என்றால் பதிவு செய்யப்பட்ட அதிகார அளிப்பு ஆவணம் அல்லது மின்னிணைப்பிற்கான விண்ணப்பம் கொடுக்கும் தேதிக்கு முன் அளிக்கப்பட்ட சமீபத்திய வாடகை ரசீது அல்லது குத்தகை ஒப்பாவணம் அல்லது நீதிமன்ற தீர்ப்புகள் / உத்தரவுகள் அல்லது உரிய அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட உடைமை கட்டளை போன்ற குடியிருப்பு சான்று:<br>(9) முதல் (11) வரை XXX | 27<br>4) இருப்பிடத்துக்குச் சொந்தக்காரராக இல்லாமல் மின்வழங்குல் கேட்கும் நுகர்வோராக விருப்பமுள்ளவர், அதைப்பெற இந்த விதித்தொகுப்பின் பின்னிணைப்பு–\|\|\| இல் உள்ள படிவம்–5 இன் படியான சம்மதக் கடிதத்தை இருப்பிட உரிமையாளரிடமிருந்து பெற்றுத்தரவேண்டும். சொந்தக்காரர் கிடைக்கவில்லையென்றாலோ அல்லது சம்மதக் கடிதம்–தர மறுத்துவிட்டாலோ, நுகர்வோராக விருப்பமுள்ளவர் அந்த இருப்பிடத்தில் குடியிருப்பதற்கான செல்லத்தக்க சான்றை தரவேண்டும். மேலும், இவ்விதியின் பின்னிணைப்பு–\|\|\| இல் உள்ள படிவம் –6 இன் படியான காப்புறுதி பத்திரத்தின் வாயிலாக, குடிமிருப்பவருக்கு மின்னிணைப்பு வழங்கலால் உருவாகும் தகராறுகளால் உரிமம்தாரருக்கு விளையும் இழப்புக்குக் காப்புறுதி தந்து, மேலும் இயல்பான காப்புறுதித் தொகையைப் போல இரட்டிப்பு மடங்குத் தொகையை காப்புறுதித் தொகையாகச் செலுத்தவும் உறுதியேற்க வேண்டும்.<br>**விளக்கம்:-**<br>இந்த உள்ஒழுங்குமுறை விதிக்காக, "செல்லத்தக்க சான்று" என்றால் பதிவு செய்யப்பட்ட அதிகார அளிப்பு ஆவணம் அல்லது மின்னிணைப்பிற்கான விண்ணப்பம் கொடுக்கும் தேதிக்கு முன் அளிக்கப்பட்ட சமீபத்திய வாடகை ரசீது அல்லது குத்தகை ஒப்பாவணம் அல்லது நீதிமன்ற தீர்ப்புகள் / உத்தரவுகள் அல்லது உரிய அதிகார அமைப்பிடமிருந்து பெறப்பட்ட உடைமை கட்டளை போன்ற குடியிருப்பு சான்று:<br>(9) முதல் (11) வரை XXX |

| வ எண் | இருந்துவரும் வகைமுறை | திருத்தப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| 10. | 27.<br>(11A) மின் வழங்கலுக்கான கோரிக்கை பலமாடி கட்டிடங்களுக்கானதாக இருக்கிறவிடத்து விண்ணப்பதாரர், விண்ணப்பத்துடன் சேர்த்து கட்டிட வரைபட ஒப்புதலளிப்பையும் திட்ட அனுமதியையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். உரிமதாரர், விண்ணப்பதாரரால் இணைத்தனுப்பப்பட்ட திட்ட அனுமதி கட்டிட வரைபடி ஒப்புதலளித்ததிலிருந்து கட்டிடத்தின் உயரத்தை சரிபார்த்தல் வேண்டும். வெளிப்படையான அளவீடு தேவையில்லை. பலமாடி கட்டிடத்தின் உயரமானது) திட்ட அனுமதி / வடை ஒப்பதலளிப்பில் கொடுக்கப்பட்ட 15 மீட்டருக்கு அதிகமாக இருக்குமானால், மத்திய மின் அதிகார அமைப்பின் (CEA) திருத்தம் செய்யப்பட்ட பாதுகாப்பு மற்றும் மின் வழங்கல் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை விதிகள் 2010க்கிணங்க, மின் ஆய்வாளரிடமிருந்து தேவையான ஒப்புதலளிப்பு விண்ணப்பதாரரால் அளிக்கப்படுதல் வேண்டும்.<br>(11 B) xxx | 27.<br>(11A) மின் வழங்கலுக்கான கோரிக்கை பலமாடி கட்டிடங்களுக்கானதாக இருக்கிறவிடத்து விண்ணப்பதாரர், விண்ணப்பத்துடன் சேர்த்து கட்டிட வரைபட ஒப்புதலளிப்பையும் திட்ட அனுமதியையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். உரிமதாரர், விண்ணப்பதாரரால் இணைத்தனுப்பப்பட்ட திட்ட அனுமதி கட்டிட வரைபடி ஒப்புதலளித்ததிலிருந்து கட்டிடத்தின் உயரத்தை சரிபார்த்தல் வேண்டும். வெளிப்படையான அளவீடு தேவையில்லை. பலமாடி கட்டிடத்தின் உயரமானது) திட்ட அனுமதி / வடை ஒப்பதலளிப்பில் கொடுக்கப்பட்ட 15 மீட்டருக்கு அதிகமாக இருக்குமானால், மத்திய மின் அதிகார அமைப்பின் (CEA) திருத்தம் செய்யப்பட்ட பாதுகாப்பு மற்றும் மின் வழங்கல் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட ஒழுங்குமுறை விதிகள் 2010க்கிணங்க, மின் ஆய்வாளரிடமிருந்து தேவையான ஒப்புதலளிப்பு விண்ணப்பதாரரால் அளிக்கப்படுதல் வேண்டும்.<br>மேலே குறிப்பிட்டுள்ள பாதுகாப்பு உடன்படுகை தவிர, தடையில்லா சான்றிதழ் வழங்குவதற்காக (தற்போது தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி 12 மீ உயரம் போன்றவை) அரசு விதிகளோ அல்லது பிற சட்டப்பூர்வ உத்தரவுகளிலோ கட்டிட வரம்பின் உயரம் குறிப்பிடப்பட்டிருந்தால், விண்ணபதாரர் அத்தகைய கட்டிடங்களுக்கான வரை பட ஒப்புதலையும் இணைக்க வேண்டும். திட்ட அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடத்தின் உயரம் மேற்கூறிய விதிகள் / ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்பை விட குறைவாக இருந்தால், விதிகள் / ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தடையில்லா சான்றிதழ் வலியுறுத்தப்படாது. இந்த வகைகளுக்கும் வெளிப்படையான அளவீடு தேவையில்லை.<br>(11 B) xxx |
| 11. | 27.<br>(12) புறம்போக்கு நிலங்கள் / அரசு நிலங்களில், தமிழ்நாடு அரசின் உரிய அலுவலரிடமிருந்து பெற்ற மறுப்பின்மைச் சான்றிதழை அளித்தால் மின்னிணைப்பு வழங்கப்படும். மேலும், விண்ணப்பதாரர் இவ்விதியின் இணைப்பு \|\|\| இல் உள்ள படிவம் – 6 இன் படியான காப்புறுதி பத்திரமும், இயல்பான காப்புறுதித் தொகையை போல இரட்டிப்பு மடங்கு காப்புறுதித் தொகையை செலுத்த வேண்டும்.<br>27 (13) முதல் 27 (15) வரை xxx | 27.<br>(12) புறம்போக்கு நிலங்கள் / அரசு நிலங்களில், தமிழ்நாடு அரசின் உரிய அலுவலரிடமிருந்து பெற்ற மறுப்பின்மைச் சான்றிதழை அளித்தால் மின்னிணைப்பு வழங்கப்படும். மேலும், விண்ணப்பதாரர் இவ்விதியின் பின்னிணைப்பு–III இல் உள்ள படிவம் – 6 இன் படியான காப்புறுதி பத்திரமும், இயல்பான காப்புறுதித் தொகையை போல இரட்டிப்பு மடங்கு காப்புறுதித் தொகையை செலுத்த வேண்டும்.<br>27 (13) முதல் 27 (15) வரை xxx |
| 12. | 27.<br>(15A) (14) மற்றும் (15) ஆம் உள் ஒழுங்குமுறைவிதிகளில் எப்படி இருந்தபோதிலும், ஒரு நபர் அல்லது நிறுவனம் அல்லது தனித்தன்மையான நிறுவனம் ஆகியவற்றிற்கு ஒரு வளாகத்தில் அல்லது சேர்ந்திருக்கும் வளாகங்களில், அவை நிரந்தரமாக புறநிலை தனிமைப்பட்ட இடங்களாக இருந்தாலும், ஒரு தொழிலுக்கோ அல்லது சேவைக்கோ அல்லது பணிக்கோ அல்லது அதன் ஐக்கியப் பணி நடவடிக்கைகள் உட்பட வேறுவிதமான அமைப்பில் இருக்கும் நடவடிக்கைகளுக்கோ, மற்றும் சார்ந்தவர்களின் பணிகளுக்கோ, ஒரே ஒரு மின்னிணைப்பு மட்டுமே வழங்கப்படும். | 27.<br>(15A) xxx<br>15(B) ஆணையத்தால் அவ்வப்போது வெளியிடப்பட்ட மின் கட்டண வீதப்பட்டியல் உத்தரவின்படி, பலஅடுக்கு குடியிருப்பு வீடு வளாகங்களிலுள்ள பொதுவான வசதிகளுக்கான மின்கட்டண வீதம் I–D ஐ உள்ளடக்கிய ஒன்றுக்கு மேற்பட்ட மின் இணைப்புகளுக்கு, மேற்கண்ட துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன. |

| வ எண் | இருந்துவரும் வகைமுறை | திருத்தப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| 13. | 27.<br>(16) மேற்கூறிய விதிவகுப்புகளை உரிமதாரர் கடைப்பிடிக்காவிட்டால் 2003ம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 42(5) ஆம் பிரிவின்படி நிறுவப்பட்ட நுகர்வோர்கள் குறை தீர்ப்பு மன்றத்தை அணுகலாம்.<br>விளக்கம்: ஐயங்களை அகற்றும் பொருட்டு, (1) ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில் மறு ஆக்கம் செய்யப்பட்டுள்ள சட்டத்தின் 43 (1) ஆம் பிரிவுக்குரிய விளக்கத்தில் வரும் ''பிற இணங்குகைகள்'' என்ற வாசகத்தின் பொருள் என்னவென்றால், இந்த விதித்தொகுப்பில் இணைப்பு III–ல் உள்ள படிவங்களில் கூறப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்பு அல்லது உத்தரவு அல்லது ஆணைகளாகும். | 27.<br>(16) மேற்கூறிய விதிவகுப்புகளை உரிமம்தாரர் கடைப்பிடிக்காவிட்டால் 2003ம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 42(5) ஆம் பிரிவின்படி நிறுவப்பட்ட நுகர்வோர்கள் குறை தீர்ப்பு மன்றத்தை அணுகலாம்.<br>விளக்கம்: ஐயங்களை அகற்றும் பொருட்டு, (1) ஆம் உள்–ஒழுங்குமுறை விதியில் மறு ஆக்கம் செய்யப்பட்டுள்ள சட்டத்தின் 43 (1) ஆம் பிரிவுக்குரிய விளக்கத்தில் வரும் ''பிற இணங்குகைகள்'' என்ற வாசகத்தின் பொருள் என்னவென்றால், இந்த விதித்தொகுப்பில் பின்னிணைப்பு–III ல் உள்ள படிவங்களில் கூறப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்பு அல்லது உத்தரவு அல்லது ஆணைகளாகும். |
| 14. | 29.<br>(1) முதல் (11) வரை xxx<br>(12)(a) பின்வரும் வரன்முறைகளின்படியான வெளியிடமானது, (தகவல் தொழில்நுட்பம் தொடர்புடைய நோக்கங்கள் அல்லாத பிற தொழில்களுக்கான மின்னிணைப்புகள் தவிர) மின்னிணைப்புகள் தேவைப்படுகிற இடங்களில், ஒன்று(a) எதிர்காலத்தையும் சேர்த்து நேரிடக்கூடிய 5 மெகா வோல்ட் ஆம்பியருக்கு மேற்படுகிற / மேற்படும் மின் தேவை அல்லது (b) மொத்த தரைப்பரப்பு 30,000 சதுர மீட்டர் மற்றும் சாய்வுத்தளம் / அடித்தளம் நீங்கலாக அதற்கு மேல் கட்டப்பட்டுள்ள அல்லது கட்டப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டுமானம், போன்ற மொத்த தேவைக்கு துணை மின்நிலையம் / இணைப்பு மின் நிலையம் அமைப்பதற்கு இலவசமாக விண்ணப்பதாரரால் இடம் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | 29.<br>(1) முதல் (11) வரை xxx<br>(12)(a) பின்வரும் வரன்முறைகளின்படியான வெளியிடமானது, மின்னிணைப்புகள் தேவைப்படுகிற குழு வீடுகள் / வணிக வளாகம் போன்ற இடங்களில், ஒன்று (a) எதிர்காலத்தையும் சேர்த்து நேரிடக்கூடிய 5 மெகா வோல்ட் ஆம்பியருக்கு மேற்படுகிற / மேற்படும் மின் தேவை அல்லது (b) மொத்த தரைப்பரப்பு 30,000 சதுர மீட்டர் மற்றும் சாய்வுத்தளம் / அடித்தளம் நீங்கலாக அதற்கு மேல் கட்டப்பட்டுள்ள அல்லது கட்டப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டுமானம், போன்ற மொத்த தேவைக்கு துணை மின்நிலையம் / இணைப்பு மின் நிலையம் அமைப்பதற்கு இலவசமாக விண்ணப்பதாரரால் இடம் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.<br>திட்ட வளாகத்திற்குள் நிலம் இல்லாத பட்சத்தில், விண்ணப்பதாரர் திட்ட வளாகத்திற்கு வெளியே ஒரு கிலோ மீட்டருக்கு மிகாமல் தெளிவான மற்றும் போதுமான பொது வழிதடம் இருக்குமாறும் மற்றும் மின்கம்பி / புதைவடம் மற்றும் உபகரணங்களை எந்த இடையூறும் இல்லாமல் அமைக்க மற்றும் பராமரிக்க எளிதாக அணுகும் வகையில் தகுந்த நிலத்தை ஒதுக்கலாம். அத்தகைய மின்கம்பிகள், புதைவடம், உபகரணங்கள், துணைக்கருவிகள் போன்றவற்றை அமைப்பதற்குண்டான கூடுதல் செலவு மற்றும் தேவைப்படும் கட்டுமானப் பணிகள் ஏதேனும் இருந்தால் விண்ணப்பதாரரால் ஏற்கப்படும். இருப்பினும், நிலத்தின் விலையில் உள்ள வேறுபாடு ஏதேனும் இருந்தால் செலுத்த வேண்டியதில்லை.<br>தொழில்துறை வளாகங்கள், சிறப்பு பொருளாதார மண்டலம் (SEZ) போன்ற தனிப்பயனாக்கப்பட்ட பெரிய அளவிலான திட்டங்களுக்கு நிலம் தேவைப்பட்டால், உரிமம்தாரர் முடிவின்படி தற்போதைய / வருங்கால மின்சுமைக்கேற்ப 400 kV முதல் 33kV மின்னழுத்த அளவு வரை வெளிப்புற துணை மின்நிலையத்தை நிறுவ தேவையான நிலத்தை விண்ணப்பதாரர் ஒதுக்க வேண்டும். சரியான மின்னழுத்தம், மின்விநியோகத்தின் தரம் மற்றும் தடையில்லா மின்விநியோகத்திற்கான செயல்பாட்டு நெகிழ்வுத்தன்மையை உறுதிப்படுத்த, நிலத்தின் பரப்பளவில் பரவியிருக்கும் மின்சுமையின் தீவிரத்தைப் பொறுத்து வளாகத்திற்குள் உள்ள ஒற்றை நிலம் அல்லது பல நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

<table>
<tr><th>வ எண்</th><th>இருந்துவரும் வகைமுறை</th><th>திருத்தப்பட்ட வகைமுறை</th></tr>
<tr>
<td>15.</td>
<td>
29.<br>
12(b) துணை – மின் நிலையங்களை நிறுவுவதற்கான நிலத் தேவையானது, கீழே கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்புடன் குறைந்தபட்ச வரம்பாக இருத்தல் வேண்டும்.
<table>
<tr><th rowspan="2">துணை நிலையத்தின் மின்னழுத்தம்</th><th colspan="2">தேவையான நிலப்பரப்பு ச.மீ.</th></tr>
<tr><th>வழக்கமான துணை மின் நிலையம்</th><th>அடக்கமான துணை மின் நிலையம்</th></tr>
<tr><td>33 கி.வோ. துணை மின் நிலையம்</td><td>850 (உட்புறம்)<br>3160<br>(வெளிப்புறம்)</td><td>400 (20x20) அல்லது (10x40) அளவுடன் அணுகக்கூடிய அருகில் உள்ள ஏதேனும் இரண்டு பக்கங்கள்</td></tr>
<tr><td>110 கி.வோ. துணை மின் நிலையம்</td><td>4000<br>(வெளிப்புறம்)</td><td>1050</td></tr>
<tr><td>230 கி.வோ. துணை மின் நிலையம்</td><td>16000<br>(வெளிப்புறம்)</td><td>1750</td></tr>
</table>
வளாகங்களின் மேம்பாட்டாளர்கள் / உரிமையாளர்கள் கூடுதல் மின் சுமைக்காக விண்ணப்பிக்கும் போதும் ஒவ்வொரு நிலையங்கள் முதலியவற்றில் கூடுதல் கட்டுமானங்கள் கட்டி மேம்படுத்தும்போதும் துணை–மின் நிலையம் நிறுவுவதற்காக மேலேயுள்ள நிலத் தேவை, தற்போதுள்ள மற்றும் கூடுதல், மின்சுமை /கட்டுமானப் பகுதி இரண்டையும் சேர்த்து, மொத்த மின்சுமை மொத்த கட்டுமானப் பகுதிக்குப் பொருந்தத்தக்கதாகும்.
</td>
<td>
29.<br>
12(b) துணை – மின் நிலையங்களை நிறுவுவதற்கான நிலத் தேவையானது, கீழே கொடுக்கப்பட்டுள்ள வடிவமைப்புடன் குறைந்தபட்ச வரம்பாக இருத்தல் வேண்டும்.
<table>
<tr><th rowspan="2">துணை நிலையத்தின் மின்னழுத்த அளவு</th><th colspan="4">தேவையான நிலப்பரப்பின் களஅளவு மற்றும் மொத்த நிலபரப்பு சதுர மீட்டரில்</th><th rowspan="2">துணை மின்நிலைய நிலத்தின் இரண்டு பக்கங்களிலும் உள்ள சாலைகளின் அகலம், போக்குவரத்துக்கான பிரதான சாலைக்கான அணுகல் (துணைமின்நிலைய பகுதியைத் தவிர)</th></tr>
<tr><th>வெளிப்புற காற்று காப்பி டப்பட்ட துணை மின் நிலையம் (மரபு முறை யானது)</th><th>உட்புற துணை மின்நிலையம் (அனைத்து உ.அ./தா.அ. உபகரணங்கள், மின்வாயில் மற்றும் பேழைகள் உட்புறம் மட்டும் உயரழுத்த மின்மாற்றி வெளிப்புறம்)</th><th>பகுதி உட்புற துணை மின்நிலையம் (உ.அ. மின்வாயில், "உ அ உபகரணம், மின் மாற்றி வெளிப்புற – தா.அ. உபகரணம், அனைத்து மின்வாயில் பேழைகள் – உட்புறம்</th><th>எரிவாயு காப்பி டப்பட்ட துணை மின் நிலையம்</th></tr>
<tr><td>33 கி.வோ. து.மி.</td><td>40 மீ. x 60 மீ. 2400 ச.மீ.</td><td>25 மீ. x 30 மீ. 750 ச.மீ.</td><td>35 மீ. x 35 மீ. 1225 ச.மீ.</td><td>20 மீ. x 20 மீ. 400 ச.மீ.</td><td>6 மீ.</td></tr>
<tr><td>110 கி.வோ. து.மி.</td><td>60 மீ. x 60 மீ. 3600 ச.மீ.</td><td>நடைமுறையில் இல்லை</td><td>40 மீ. x 50 மீ. 2000 ச.மீ.</td><td>30 மீ. x 40 மீ. 1200 ச.மீ.</td><td>6 மீ.</td></tr>
<tr><td>230 கி.வோ. து.மி.</td><td>120 மீ.x200 மீ. 24,000 ச.மீ.</td><td>90 மீ. x 180 மீ. 16,200 ச.மீ.</td><td>நடை முறையில் இல்லை</td><td>60 மீ. x 80 மீ. 4800 ச.மீ.</td><td>6 மீ.</td></tr>
<tr><td>400 கி.வோ. து.மி.</td><td>500 மீ. x 320 மீ. 1,60,000 ச.மீ.</td><td>நடைமுறையில் இல்லை</td><td>நடை முறையில் இல்லை</td><td>200 மீ. x 100 மீ. 20000 ச.மீ.</td><td>8 மீ.</td></tr>
</table>
வளாகங்களின் மேம்பாட்டாளர்கள் / உரிமையாளர்கள் கூடுதல் மின் சுமைக்காக விண்ணப்பிக்கும் போதும் ஒவ்வொரு நிலையங்களிலும் கூடுதல் கட்டுமானங்கள் கட்டி மேம்படுத்தும்போதும் துணை–மின் நிலையம் நிறுவுவதற்காக மேலேயுள்ள நிலத் தேவையானது, தற்போதுள்ள மற்றும் கூடுதல் மின்சுமை /கட்டுமானப் பகுதி இரண்டையும் சேர்த்து, மொத்த மின்சுமை/ மொத்த கட்டுமானப் பகுதிக்குப் பொருந்தத்தக்கதாகும்.
</td>
</tr>
</table>

| *வ எண்* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தப்பட்ட வகைமுறை* |
|---|---|---|
| **16.** | 29.<br><br>12 (c) xxx<br><br>(d) மொத்தத் தேவையானது 5 மெகா வோல்ட் ஆம்பியருக்கு மேற்படுகிறவிடத்து / மேற்படக்கூடிய விடத்து அல்லது மொத்தத் தரைப்பரப்பு 30,000 சதுர மீட்டர் மற்றும் அதற்கு மேலும் (சாய்வுதளம் / அடித்தளம் நீங்கலாக) கட்டப்பட்டிருக்கிறவிடத்து / கட்டப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறவிடத்து விண்ணப்பதாரர் வழக்கமான வெளிப்புற காற்று காப்பு இணைப்பமைப்பு (AIS) துணை–மின் நிலையம் நிறுவுவதற்குப் பொருத்தமான நிலத்தை ஒதுக்க வேண்டும். விண்ணப்பதாரர் வழக்கமான வெளிப்புற காற்றுகாப்பு துணை – மின்நிலையம் அல்லாத பிற அடக்கமான அல்லது உள்புற துணை– மின்நிலையத்திற்கு பொருத்தமான நிலத்தை ஒதுக்குவதற்குத் தெரிவு செய்யும் நேர்வில், ‘விண்ணப்பதாரர் அடக்கமான அல்லது உள்புற துணை–மின் நிலையம் அமைப்பதற்காக வழங்கப்பட்ட இடத்திற்கானதும் வழக்கமான வெளிப்புற, காற்று காப்பு துணை–மின் நிலையத்திற்குமானதும் இடையே உள்ள வேறுபாட்டு தொகையை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பதாரர், ‘விண்ணப்பிக்கப்பட்ட மின் தேவையின் அளவு அல்லது உரிமதாரரால் மதிப்பிடப்பட்ட மின் தேவையின் அளவு, இவற்றில் எது உயர்ந்த அளவோ அந்த அளவுக்குச் சமமான துணை– மின் நிலையம் அமைப்பதற்காக நிலத்தை ஒதுக்க வேண்டும்.<br><br>விளக்கம்:<br><br>(i) அடக்கமான மற்றும் வெளிப்புற வகையான மின் நிலையங்களுக்கிடையேயான அல்லது உட்புற மற்றும் வெளிப்புற வகையான மின்நிலையங்களுக்கிடையேயான செலவில் ஏற்படும் வேறுபாட்டுத் தொகையைக் கணக்கிடுகையில் பின்வரும் முறை பின்பற்றப்படும்:<br><br>(ii) உயர் மின்னழுத்த சாதனங்கள் சம்பந்தமான பகுதி, விண்ணப்பதாரர்களுக்கு மின்சாரம் ஊட்டப்படுகிற ஒரே ஒரு மின்மாற்றி, அதன் தாழ்வழுத்த மின்னூட்டி, அதனைச் சார்ந்த தாழ்வழுத்த பிரிகலன், மின்னோட்ட மின் மாற்றிகள், இணைப்பிகள், கட்டுப்பாட்டு சாதனங்கள் ‘விண்ணப்பதாரருக்கு மின்சாரம் ஊட்டப்படுகிற தாழ்வழுத்த மின்னூட்டிகளின் எண்ணிக்கை, அவைகளின் மின்னூட்ட சாதனம், கட்டுபாட்டு சாதனங்கள், மின்வடங்கள், துணைக் கருவிகள், முதலியவற்றை வெளிப்புற துணை–மின் நிலையத்தின் இதே போன்ற ஒத்தப் பகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து அவற்றிற்கிடையேயான செலவுத்தொகை வேறுபாட்டினைக் கணக்கிட வேண்டும். | 29,<br><br>12 (c) xxx<br><br>(d) மொத்த மின்தேவை 5 மெகா வோல்ட் ஆம்பியருக்கு மேற்படுகிறவிடத்து / மேற்படக்கூடிய பட்சத்தில் அல்லது மொத்தத் தரைப்பரப்பு 30,000 சதுர மீட்டர் மற்றும் அதற்கு மேலும் (சாய்வுதளம் / அடித்தளம் நீங்கலாக) கட்டப்படும் பட்சத்தில் / கட்டப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறவிடத்து, விண்ணப்பதாரர் வழக்கமான வெளிப்புற காற்று காப்பு (AIS) துணை–மின் நிலையம் நிறுவுவதற்குப் பொருத்தமான நிலத்தை ஒதுக்க வேண்டும். பரிசுப் பத்திரம் அல்லது இலவச விற்பனைப் பத்திரம் அல்லது ஆண்டுக்கு ரூ.1/– வீதம் 99 ஆண்டுகளுக்கு குத்தகைப் பத்திரம் மூலம் நிலம் வழங்கப்பட வேண்டும். விண்ணப்பதாரர் வழக்கமான வெளிப்புற காற்றுகாப்பு துணை மின்நிலையம் அல்லாத உட்புற துணை மின்நிலையம் அல்லது பகுதி உட்புற துணை மின்நிலையம் அல்லது எரிவாயு காப்பிடப்பட்ட (GIS) துணை – மின்நிலையத்திற்கு பொருத்தமான நிலத்தை ஒதுக்குவதற்குத் தெரிவு செய்யும் நேர்வில், விண்ணப்பதாரர் உட்புற துணை மின்நிலையம் அல்லது பகுதி உட்புற துணை மின்நிலையம் அல்லது எரிவாயு காப்பிடப்பட்ட (GIS) துணை – மின்நிலையம் அமைப்பதற்காக வழங்கப்பட்ட இடத்திற்கும் வழக்கமான வெளிப்புற காற்று காப்பு துணை–மின் நிலையத்திற்குமான இடையே உள்ள வேறுபாட்டு தொகையை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பதாரர், விண்ணப்பிக்கப்பட்ட மின் தேவையின் அளவு அல்லது உரிமம்தாரரால் மதிப்பிடப்பட்ட மின் தேவையின் அளவு, இவற்றில் எது உயர்ந்த அளவோ அந்த அளவுக்குச் சமமான துணை–மின் நிலையம் அமைப்பதற்காக நிலத்தை ஒதுக்க வேண்டும்.<br><br>விளக்கம்:<br><br>(i) உட்புற துணை மின்நிலையம் மற்றும் வெளிப்புற வகையான மின் நிலையங்களுக்கிடையேயான அல்லது பகுதி உட்புற துணை மின்நிலையம் மற்றும் வெளிப்புற வகையான மின் நிலையங்களுக்கிடையேயான அல்லது எரிவாயு காப்பிடப்பட்ட (GIS) துணை - மின்நிலையம் மற்றும் வெளிப்புற வகையான மின் நிலையங்களுக் கிடையேயான செலவில் ஏற்படும் வேறுபாட்டுத் தொகையைக் கணக்கிடுகையில் பின்வரும் முறை பின்பற்றப்படும்:<br><br>(ii) உயர் மின்னழுத்த சாதனங்கள் சம்பந்தமான பகுதி, விண்ணப்பதாரர்களுக்கு மின்சாரம் ஊட்டப்படுகிற மின்மாற்றி/ மின்மாற்றிகள், அதன் தாழ்வழுத்த மின்னூட்டி, அதனைச் சார்ந்த தாழ்வழுத்த பிரிகலன், மின்னோட்ட மின் மாற்றிகள், இணைப்பிகள், கட்டுப்பாட்டு சாதனங்கள் விண்ணப்பதாரருக்கு மின்சாரம் ஊட்டப்படுகிற தாழ்வழுத்த மின்னூட்டிகளின் எண்ணிக்கை, அவைகளின் மின்னூட்ட சாதனம், கட்டுப்பாட்டு சாதனங்கள், மின்வடங்கள், துணைக் கருவிகள், முதலியவற்றை வெளிப்புற துணை–மின் நிலையத்தின் இதே போன்ற ஒத்தப் பகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து அவற்றிற்கிடையேயான செலவுத்தொகை வேறுபாட்டினைக் கணக்கிட வேண்டும்.<br><br>(iii) எஞ்சிய மின்மாற்றிகள், அதனுடன் தொடர்புடைய உயர்மின்னழுத்த மின்னிணைப்பிகள், தாழ்வழுத்த பிரிகலன்கள், மின்னோட்ட மின்மாற்றிகள், மின்னிணைப்பிகள், கட்டுப்பாட்டு சாதனங்கள், மற்ற பகுதிகளுக்கு மின்னூட்டம் அளிக்கின்ற தாழ்வழுத்த மின்னூட்டிகள், அவைகளின் மின்னூட்டி சாதனம், கட்டுப்பாட்டு சாதனங்கள், மின் வடங்கள், துணைக்கருவிகள் முதலியவற்றின் தொடர்பான செலவுத் தொகை உரிமம்தாரரால் முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். |

| வ எண் | இருந்துவரும் வகைமுறை | திருத்தப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| | (iii) எஞ்சிய மின்மாற்றிகள், அதனுடன் தொடர்புடைய உயர்மின்னழுத்த மின்னிணைப்பிகள், தாழ்வழுத்த பிரிகலன்கள், மின்னோட்ட மின்மாற்றிகள், மின்னிணைப்பிகள், கட்டுப்பாட்டு சாதனங்கள், மற்ற பகுதிகளுக்கு மின்னூட்டம் அளிக்கின்ற தாழ்வழுத்த மின்னூட்டிகள், அவைகளின் மின்னூட்டி சாதனம், கட்டுப்பாட்டு சாதனங்கள், மின் வடங்கள், துணைக்கருவிகள் முதலியவற்றின் தொடர்பான செலவுத் தொகை உரிமதாரரால் முழுவதுமாக ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.<br>12 (e) xxx | (iv) கட்டுப்பாட்டு அறை கட்டிடம் மற்றும் வழக்கமான வெளிப்புற (AIS) துணை மின் நிலையத்திற்கும் மற்றும் விண்ணப்பதாரரால் நிலம் வழங்கப்படும் பிற வகை துணை மின்நிலையம் தொடர்பான பிற கட்டுமான பணிகளுக்கும் இடையேயான செலவில் உள்ள வேறுபாடு விண்ணப்பதாரரால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.<br>12 (e) xxx |
| 17. | 29.<br>(13) முதல் (15) வரை xxx<br>(16) மின் வழங்கல் புள்ளி அமைய வேண்டிய இருப்பிடம் பற்றிய உடன்பாடு ஏற்பட்டதும், பொறியாளர், கோரும் நுகர்வோருக்கு மின்னிணைப்புத் தொடர் அமைப்பதற்கான விலை மதிப்பீட்டை அனுப்பி வைப்பார். கோரும் நுகர்வோர், மதிப்பீடு செய்த தொகையை முன் கூட்டியே முழுமையாகச் செலுத்திய பிறகே, மின்னிணைப்புத் தொடர் அமைப்பதற்கான பணி மேற்கொள்ளப்படும். கோரும் நுகர்வோர் மின்னிணைப்புத் தொடருக்காக செலுத்த வேண்டிய தொகை, உரிமதாரரின் அவ்வப்போதைய மதிப்பீட்டின் படி அமையும். | 29.<br>(13) முதல் (15) வரை xxx<br>(16) மின் வழங்கல் புள்ளி அமைய வேண்டிய இருப்பிடம் பற்றிய உடன்பாடு ஏற்பட்டதும், பொறியாளர், கோரும் நுகர்வோருக்கு விநியோக மின்மாற்றி மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டமைப்பு பொருட்கள் மற்றும் துணைப்பொருட்களின் விலையைத் தவிர்த்து, நுகர்வோரின் வளாகத்தில் உள்ள பகுதிக்கான மின்னிணைப்புத் தொடர் அமைப்பதற்கான விலை மதிப்பீட்டை அனுப்பி வைப்பார். கோரும் நுகர்வோர், மதிப்பீடு செய்த தொகையை முன் கூட்டியே முழுமையாகச் செலுத்திய பிறகே, மின்னிணைப்புத் தொடர் அமைப்பதற்கான பணி மேற்கொள்ளப்படும். |
| 18. | 29.<br>(17) மின்னிணைப்புத் தொடர் உரிமதாரரின் சொத்தாகும். அதை அவர், அவரது சொந்தச் செலவில் பேணுதல் வேண்டும்.<br>(18) xxx | 29.<br>(17) மின்னிணைப்புத் தொடர் உரிமம்தாரரின் சொத்தாகும். அதை அவர், அவரது சொந்தச் செலவில் பேணுதல் வேண்டும். நுகர்வோர் வளாகத்திற்குள் அமைக்கப்பட்டுள்ள உபகரணங்கள், மின் கம்பங்கள், மின் விநியோக பெட்டிகள் மின்னளவி மற்றும் துணைக்கருவிகள் ஆகியவை நுகர்வோரால் பாதுகாக்கப்பட்டு உரிமம்தாரரால் பராமரிக்கப்படும்.<br>மின் இணைப்பிற்காக அமைக்கப்பட்ட அருகாமையிலுள்ள மின் கம்பம் / மின் விநியோக பெட்டியிலிருந்து மின்னளவியுடன் இணைக்கப்பட்டுள்ள மின்கம்பி / கம்பிவடம் உள்ளிட்ட மின் இணைப்பிற்கு தொடர்பான பொருட்கள் நுகர்வோரால் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்படுவதோடு அவை சேதம் அல்லது நீண்ட காலத்தினால் தேய்மானத்தினால் மாற்றீடு செய்யும் செலவினை நுகர்வோரே ஏற்கவேண்டும்.<br>(18) xxx |

| வ எண் | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தப்பட்ட வகைமுறை* |
|---|---|---|
| 19. | **31 ஆய்வும் சோதிப்பும் மின் வழங்கல் தரலும்**<br>(1) மின் கம்பியமைப்பு பணி முடிந்ததும், கோரும் நுகர்வோர் (உரிமதாரர் அலுவலகங்களில் விலையின்றிக் கிடைக்கும் அச்சிட்ட சோதனைப் படிவத்தில்) பொறியாளருக்குத் தனது நிறுவல் அமைப்பின் பணிமுடிந்து சோதனையும் செய்து, அது மேலும் பொறியாளரது ஆய்வு மற்றும் சோதனைக்காக ஆயத்தமாக உள்ளதை, நுகர்வோர் அறிவிக்க வேண்டும். அவரது நிறுவல் அமைப்பை ஆய்வு மற்றும் சோதனை செய்ய வரவுள்ள எண்ணத்தை பொறியாளர், கோரும் நுகர்வோருக்குத் தெரிவிக்க வேண்டும். அப்போது அப்படி பொறியாளர் வருகை தரவுள்ள நேரத்தில், நிறுவல் அமைப்பைப் பற்றித் தேவைப்படும் தகவல்களைத் தருவதற்காக, நுகர்வோரோ அல்லது அவரது அதிகாரத்தைப் பெற்றுள்ள சார்பாளரோ, நுகர்வோர் இருப்பிடத்தில் வந்திருத்தல் வேண்டும். சோதனை அறிக்கையை எழுதி கொடுப்பதன் / அதில் கையொப்பமிடுவதன் பேரில், சோதனை அறிக்கையின் நகல் ஒன்று நுகர்வோருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.<br>(2) முதல் (4) வரை XXX | **31 ஆய்வும் சோதிப்பும் மின் வழங்கல் தரலும்**<br>(1) மின் கம்பியமைப்பு பணி முடிந்ததும், கோரும் நுகர்வோர் (உரிமம்தாரர் அலுவலகங்களில் விலையின்றிக் கிடைக்கும் அச்சிட்ட சோதனைப் படிவத்தில்) பொறியாளருக்குத் தனது நிறுவல் அமைப்பின் பணிமுடிந்து சோதனையும் செய்து, அது மேலும் பொறியாளரது ஆய்வு மற்றும் சோதனைக்காக ஆயத்தமாக உள்ளதை, நுகர்வோர் அறிவிக்க வேண்டும். அவரது நிறுவல் அமைப்பை ஆய்வு மற்றும் சோதனை செய்ய வரவுள்ள எண்ணத்தை பொறியாளர், கோரும் நுகர்வோருக்குத் தெரிவிக்க வேண்டும். அப்போது அப்படி பொறியாளர் வருகை தரவுள்ள நேரத்தில், நிறுவல் அமைப்பைப் பற்றித் தேவைப்படும் தகவல்களைத் தருவதற்காக, நுகர்வோரோ அல்லது அவரது அதிகாரத்தைப் பெற்றுள்ள சார்பாளரோ, நுகர்வோர் இருப்பிடத்தில் வந்திருத்தல் வேண்டும். சோதனை அறிக்கையை எழுதி கொடுப்பதன் / அதில் கையொப்பமிடுவதன் பேரில், சோதனை அறிக்கையின் நகல் ஒன்று நுகர்வோருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.<br>அசல் சோதனை அறிக்கை ஒரு நிரந்தர மற்றும் சட்டப்பூர்வ பதிவாகும் என்பதால் உரிமம்தாரரால் தக்கவைக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.<br>(2) முதல் (4) வரை XXX |
| 20. | 31.<br>(5) கோரும் நுகர்வோர் மின்வழங்கல் கிடைத்தலுக்கான காலத்துக்குள் மின் வழங்கலைப் பெற்றுக் கொண்டால், மின் வழங்கல் கிடைத்தலுக்கான முதல் அறிவிப்பு தேதியிலிருந்து மின் வழங்கலைப் பெற்ற தேதிவரையிலான காலத்துக்கு அறிவிப்பு செய்யப்பட்ட கட்டணவீதத்தில் மாதச் சிறுமக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.<br>(6) XXX | 31.<br>(5) மின்னிணைப்பு கோரும் நுகர்வோர் மின்வழங்கல் ஆயத்த அறிவிப்பு காலத்துக்குள் மின் வழங்கலைப் பெற்றுக் கொண்டால், மின் வழங்கல் ஆயத்த முதல் அறிவிப்பு தேதியிலிருந்து மின் வழங்கலைப் பெற்ற தேதிவரையிலான காலத்துக்கு, கோரப்பட்ட முழு மின்தேவைக்கு, அறிவிப்பு செய்யப்பட்ட கட்டணவீதத்தில் மாதச் சிறுமக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.<br>மின் இணைப்புக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவைத் தாண்டி கால நீட்டிப்பைப் பெறும் நுகர்வோர்கள், நிர்ணயிக்கப்பட்ட தாமத செலுத்த உபரி கட்டணம் (BPSC) செலுத்த வேண்டும்.<br>(6) XXX |
| 21. | **33. இசைவுப் பத்திரங்கள்:**<br>(1) கோரும் நுகர்வோர்கள் காப்புவைப்புத் தொகையையும் மின்னிணைப்புக் கட்டணத்தையும் செலுத்தும்போது, தரப்படும் படிவத்தில் அமைந்த மின்சார வழங்கல் தொடர்பான இசைவுப் பத்திரத்தில் கையொப்பமிட வேண்டும். இசைவுப் பத்திரத்தில் கையொப்பமிட்டு அதை ஏற்றபிறகும் காப்பு வைப்புத் தொகையையும், மின்னிணைப்புக் கட்டணத்தையும் செலுத்திய பிறகுமே மின்னிணைப்பு நீட்டிப்புப் பணி மேற்கொள்ளப்படும். வேளாண்மை, தொழிலக வகையினங்கள் தவிர, பிற தாழ் அழுத்த மின்னிணைப்புகளுக்கு விண்ணப்பமே, விண்ணப்பம் மற்றும் இசைவுப் பத்திரம் இரண்டுமாகக் கொள்ளப்படும். வேளாண்மை மற்றும் தொழிலகம் சார்ந்த தாழ் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில் இணைப்பு III இல் உள்ள படிவம் 7 இல் இசைவுப் பத்திரம் அமைய வேண்டும். உயர் அழுத்த நுகர்வோர்களைப் பொருத்தவரையில், இணைப்பு III இல் உள்ள படிவம் 8 இல் இசைவுப் பத்திரம் அமைய வேண்டும்.<br>(2) முதல் (4) வரை XXX | **33. இசைவுப் பத்திரங்கள்:**<br>(1) கோரும் நுகர்வோர்கள் காப்புவைப்புத் தொகையையும் மின்னிணைப்புக் கட்டணத்தையும் செலுத்தும்போது, தரப்படும் படிவத்தில் அமைந்த மின்சார வழங்கல் தொடர்பான இசைவுப் பத்திரத்தில் கையொப்பமிட வேண்டும். இசைவுப் பத்திரத்தில் கையொப்பமிட்டு அதை ஏற்றபிறகும் காப்பு வைப்புத் தொகையையும், மின்னிணைப்புக் கட்டணத்தையும் செலுத்திய பிறகுமே மின்னிணைப்பு நீட்டிப்புப் பணி மேற்கொள்ளப்படும். வேளாண்மை, தொழிலக வகையினங்கள் தவிர, பிற தாழ் அழுத்த மின்னிணைப்புகளுக்கு விண்ணப்பமே, விண்ணப்பம் மற்றும் இசைவுப் பத்திரம் இரண்டுமாகக் கொள்ளப்படும். வேளாண்மை மற்றும் தொழிலகம் சார்ந்த தாழ் அழுத்த மின்னிணைப்புகளைப் பொருத்தவரையில் பின்னிணைப்பு–III இல் உள்ள படிவம் 7 இல் இசைவுப் பத்திரம் அமைய வேண்டும். உயர் அழுத்த நுகர்வோர்களைப் பொருத்தவரையில், பின்னிணைப்பு–III இல் உள்ள படிவம் 8 இல் இசைவுப் பத்திரம் அமைய வேண்டும்.<br>(2) முதல் (4) வரை XXX |

| *வ எண்* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தப்பட்ட வகைமுறை* |
|---|---|---|
| 22. | 33.<br>(5) (3)—ஆம் உள் –ஒழுங்குமுறை விதியன்படி நுகர்வோரால் அல்லது நேர்வுக்கேற்ப, (4)—ஆம் உள்ஒழுங்கு முறைவிதியின்படி உரிமம்தாரரால் உடன்பாட்டுப்பத்திரம் முடிவுறுத்தப்படும் நேர்வில், உரிமம்தாரர், நுகர்வோரால் செய்யப்பட்ட பிணைய வைப்பீடு அல்லது கூடுல் பிணைய வைப்பீடு அல்லது ஏதேனும் பிற வைப்பீட்டிற்கு எதிராக நுகர்வோரிடமிருந்து நிலுவைகளைத் தீர்ப்பதற்கு அவசியமாகலாகும், நுகர்வோரால் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைகளைச் சரிக்கட்டுதல் செய்த பின்பு, நுகர்வோரிடமிருந்து கொடுக்கப்படவேண்டிய நிலுவைகள், எவையேனுமிருப்பின், அவற்றை வசுகித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய சரிக்கட்டுதல் செய்த பின்பு, உடன்பாட்டுப்பத்திரம் முடிவறுத்தப்படும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் நுகர்வோரிடம், மீதி வைப்பீட்டுத் தொகை, ஏதேனுமிருப்பின். அதனை திருப்பிக் கொடுத்தல் வேண்டும். | 33.<br>(5) உள் ஒழுங்குமுறை (3)—இன் கீழ் நுகர்வோர் கோரியபடி மின்னளவி நிரந்தரமாக துண்டிக்கப்பட்டு ஒப்பந்தம் முடிவடையும் பட்சத்தில், உரிமம்தாரர் மின்னளவி இயல்பான செயல்பாடு மற்றும் மின்நுகர்வு நல்ல முறையில் செயல்படும் நிலையில் ஒரு சிறப்பு மின்னளவிடுதலுக்கு ஏற்பாடு செய்து இறுதி பட்டியல் தயாரிக்க வேண்டும். இறுதி பட்டியல் தொகை செலுத்தப்பட்ட பிறகு மின் இணைப்பு உடனடியாக துண்டிக்கப்படுதல் வேண்டும். இறுதி பட்டியலிற்கும் நிரந்தரத் துண்டிப்புக்கும் இடையே மின் நுகர்வினால் நிலுவைத்தொகை இருப்பின் அல்லது நுகர்வோர் தனது மின்னிணைப்பி(புகளி)ல் ஏதேனும் ஒன்றில் செலுத்த வேண்டிய நிலுவை தொகை இருப்பின் அவை பாதுகாப்பு வைப்பு மற்றும் அதன் மீதான வட்டியில் சமன்செய்யப்படும். மீதமுள்ள பாதுகாப்பு வைப்பு மற்றும் வட்டி ஏதேனும் இருந்தால் நுகர்வோரின் விருப்பத்தின்படி நுகர்வோரின் வேறு ஏதேனும் மின் இணைப்பிற்கு மாற்றப்படும் அல்லது நுகர்வோருக்குத் திருப்பியளிக்கப்படும். நுகர்வோர் பணத்தைத் திரும்பப்பெறத் தேர்வுசெய்தால், உரிமம்தாரர் விண்ணப்பதாரரின் வங்கிக் கணக்கில் நிகழ்நிலை மூலம் பணத்தைத் திரும்பப் செலுத்தும் வகையில், நுகர்வோர் தனது வங்கிக் கணக்கின் விவரங்களை உரிமம்தாரருக்குத் தெரிவிக்க வேண்டும். அத்தகைய விவரங்கள் பெறப்பட்ட தேதியிலிருந்து அல்லது மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட தேதியிலிருந்து எது பிந்தையதோ அதிலிருந்து ஏழு நாட்களுக்குள் நுகர்வோரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படவேண்டும். பரிவர்த்தனையை ஒழுங்குபடுத்துதல் / கழட்டப்பட்ட மின்னளவியினை கணக்கிலெடுத்தல் மற்றும் கணக்குகளை முடித்தல் பின்னர் செய்யப்படவேண்டும்.<br>வைப்புத்தொகை மற்றும் அதன் மீதான வட்டியை விட நிலுவைத் தொகை அதிகமாக இருந்தால், நிரந்தரத் துண்டிப்பு மற்றும் ஒப்பந்தம் முடிவடைவதற்கு முன், நுகர்வோர் நிலுவைத் தொகையை முழுமையாகச் செலுத்த வேண்டும். |
| 23. | 33.<br>(5) XXX | 33.<br>(5) XXX<br>(6) உள் ஒழுங்குமுறை (4)—இன் கீழ், உரிமம்தாரரால் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டால், நிறுத்தப்பட்ட மின் இணைப்புகளில் நிலுவைத் தொகை ஏதேனும் இருப்பின் மற்றும் அதே நுகர்வோரின் பிற மின் இணைப்புகளில் நிலுவைத் தொகை ஏதேனும் இருப்பின் அவற்றை உரிமம்தாரர் ஒப்பந்தம் நிறுத்தப்பட்ட மின் இணைப்பில் உள்ள பாதுகாப்பு வைப்பு தொகை மற்றும் அதன் மீதான வட்டியிலிருந்து சரி செய்ய வேண்டும். அவ்வாறு சரி செய்த பிறகு மீதமுள்ள வைப்பு தொகை ஏதேனும் இருப்பின் நுகர்வோரின் விருப்பத்தின்படி ஒப்பந்தம் நிறுத்தப்பட்ட முப்பது நாட்களுக்குள் நுகர்வோரின் வேறு ஏதேனும் மின் இணைப்பிற்கு மாற்றப்படும் அல்லது நுகர்வோருக்குத் திருப்பியளிக்கப்படும். பரிவர்த்தனையை ஒழுங்குபடுத்துதல் / கழட்டப்பட்ட மின்னளவியினை கணக்கிலெடுத்தல் மற்றும் கணக்குகளை முடித்தல் பின்னர் செய்யப்படவேண்டும். “ |

| வ எண் | இருந்துவரும் வகைமுறை | திருத்தப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| 24. | **39. தற்காலிக மின்வழங்கல்:**<br>(1) xxx<br>(2) xxx<br>(i) xxx<br>(ii) மூன்று பட்டியல் சுற்றுக் கால அளவிற்கு மின்நுகர்வு கட்டணங்களுக்குச் சமமான கீழ்க்ண்டவாறு கணக்கிடப்பட்ட பிணை வைப்புத்தொகை வசூலிக்கப்படும் மற்றும் தற்காலிக மின்வழங்கல் காலஅளவு முழுவதும் அத்தொகை வைத்துவரப்படும்.<br>பிணை வைப்புத் தொகை– 3 x L x LF x H x D x T<br>இவற்றுள்<br>L = இணைக்கப்பட்ட மின்சுமை கிலோவாட்டில்<br>LF = சுமைக்காரணி = 0.5<br>H = ஒருநாளின் நேரம் = 24 மணி<br>D = மின்வழங்கல் விதித் தொகுப்பில், ஒழுங்குமுறை விதி 8 (1) ல் குறித்துரைக்கப்பட்ட பட்டியல் சுற்றுக் கால அளவு / பயன்பாட்டிற்காக உத்தேசிக்கப்பட்ட கால அளவு, இதில் எது குறைவோ, அதற்கான நாட்களின் எண்ணிக்கை.<br>T = தற்காலிக மின்வழங்கலுக்காக, ஆணையத்தினால் அவ்வப்போது குறித்துரைக்கப்பட்ட மின்கட்டண வீதம்<br>(III) முதல் (IV ) வரை XXX | **39. தற்காலிக மின்வழங்கல்:**<br>(1) xxx<br>(2) xxx<br>(i) xxx<br>(ii) தற்காலிக மின் வழங்களுக்கு, முன்பணம் செலுத்தும் வசதியுள்ள மின்னளவிகள் (pre–paid meter) (மீள்நிரப்பு அட்டை முறை) பொருத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரர் விருப்பம் தெரிவித்தால் பரிந்துரைக்கப்பட்ட தரநிலைகள், விவரக்குறிப்புகள் மற்றும் தொடர்புடைய விதிமுறைகளின்படி முன்பணம் செலுத்தும் வசதியுள்ள மின்னளவிகள் சொந்தமாக வாங்கலாம் அல்லது மின் பகிர்மான உரிமம்தாரரால் அந்த மின்னளவிகள் வழங்கப்பட விரும்பலாம். நுகர்வோர் தனது சொந்த மின்னளவியை வாங்கத் தேர்ந்தெடுக்காத பட்சத்தில், உரிமம்தாரர் சட்டப்பூர்வ தரநிலைகள் மற்றும் தொடர்புடைய ஒழுங்குமுறைகளுக்கு இணங்க மின்னளவிகளை வழங்குவார். மேலும், நுகர்வோர் மின்னளவியின் விலைக்கு போதுமான பாதுகாப்புத் தொகை வழங்க வேண்டும்.<br>முன்பணம் செலுத்தும் மின்னளவிக்கு, மின்நுகர்வுக்கான பிணை வைப்புத் தொகை செலுத்த வேண்டிய தேவையில்லை.<br>சந்தையில் முன்பணம் செலுத்தும் வசதியுள்ள மின்னளவிக்கு பற்றாக்குறை ஏற்பட்டு விண்ணப்பதாரர் மற்றும் உரிமம்தாரர் ஆகிய இருவராலும் வாங்கி வழங்க முடியாத நிலையில் மரபு முறையான மின்னளவியினை விண்ணப்பதாரர் அல்லது உரிமம்தாரர் யாரேனும் ஒருவரால் வழங்கப்படலாம்.<br>மேற்கண்ட நேர்வில், பிணை வைப்புத்தொகையானது இரண்டு பட்டியல் சுற்றுக் கால மின்நுகர்வு கட்டணங்களுக்குச் சமமாக கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டு வசூலிக்கப்படும் மற்றும் தற்காலிக மின்வழங்கல் காலஅளவு முழுவதும் அத்தொகை பராமரிக்கப்படும்.<br>பிணை வைப்புத் தொகை – 2 x L x LF x H x D x T<br>இவற்றுள்,<br>L = இணைக்கப்பட்ட மின்சுமை கிலோவாட்டில்<br>LF = சுமைக்காரணி– 0.5<br>H = ஒரு நாளிற்கான நேரம் – 8 மணி<br>D = மின்வழங்கல் விதித் தொகுப்பில், ஒழுங்குமுறை விதி 8(1)–ல் குறித்துரைக்கப்பட்ட பட்டியல் சுற்றுக் கால அளவு / பயன்பாட்டிற்காக உத்தேசிக்கப்பட்ட கால அளவு, இதில் எது குறைவோ, அதற்கான நாட்களின் எண்ணிக்கை.<br>T = தற்காலிக மின்வழங்கலுக்காக, ஆணையத்தினால் அவ்வப்போது குறித்துரைக்கப்பட்ட மின்கட்டண வீதம்.<br>(iii) முதல் (iv) வரை xxx |
| 25. | **45. மின்னிணைப்புக் கட்டணங்கள்**<br>(1) மின்னிணைப்புக் கட்டணம் சார்ந்த மீட்புத் தொகைகள் பின்வருமாறு<br>(i) ஒரு நிறுவல் தொகுப்புக்கு இணைப்பு தர, உரிமம்தாரர், மின்னளவிப் பலகை வரையுள்ள பொருள்களுக்கும் அவற்றின் போக்குவரத்துக்கும், அவற்றை நிறுவத் தேவைப்படும் உழைப்புக்கும் மேற்பார்வைக்கும் ஏற்படும் செலவுகளுடனான அடக்க விலையை, நுகர்வோருக்குக் கட்டணமாக விதிக்கலாம். | **45. மின்னிணைப்புக் கட்டணங்கள்**<br>(1) மின்னிணைப்புக் கட்டணம் சார்ந்த மீட்புத் தொகைகள் பின்வருமாறு<br>(i) ஒரு நிறுவல் தொகுப்புக்கு இணைப்புத் தர, உரிமம்தாரருக்கு, மின்னளவிப் பலகை வரையுள்ள பொருள்களுக்கும் அவற்றின் போக்குவரத்துக்கும், அவற்றை நிறுவத் தேவைப்படும் உழைப்புக்கும் மேற்பார்வைக்கும் ஏற்படும் செலவுகளுடனான அடக்க விலையை, நுகர்வோர் வளாகத்தில் மின்னளவிப் பலகை வரையிலான பணிகளுக்கு, மின்மாற்றி/, அதன் கட்டமைப்பு மற்றும் உபகரணங்களைத் தவிர்த்து, நுகர்வோருக்குக் கட்டணமாக விதிக்க உரிமை உண்டு.” |

| வ எண் | இருந்துவரும் வகைமுறை | திருத்தப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| 26. | 45.<br>1 (ii) xxx<br>(iii) மின்னிணைப்புக்குரிய மதிப்பீடு, 45(2)–ஆவது ஒழுங்கு முறைவிதியில் குறிப்பிட்டுள்ளபடி மின்னளவு, செய்யும் ஏற்பாட்டுக்குரிய மின்னிணைப்புக் கட்டணங்களையும் உள்ளடக்கும் நுகர்வோர் பொருள்களேதும் தந்திருந்தால் அதற்கான தொகையை, உரிமதாரர், நுகர்வோர் கணக்கில் வரவு வைக்க வேண்டும். | 45.<br>1 (ii) xxx<br>(iii) விண்ணப்பதாரர்களுக்கு மின்வழங்களுக்காக பயன்படுத்தப்படும் மின்மாற்றிகள், மின்விநியோக பெட்டிகள் (pillar boxes), மின்கம்பங்கள் உள்ளடக்கிய மின் இணைப்பு கம்பிகள் மற்றும் உபகரணங்களை மின்நுகர்வோரின் வளாகத்தின் வெளிப்புறப்பகுதியில் நிறுவப்படுவதற்கான செலவினம் உ.அ. (HT) மற்றும் தா.அ. (LT) மின்வகைக்கான மேம்பாட்டுக் கட்டணத்திற்குள் அடங்கும். மின் சுமை மற்றும் மின் இணைப்பின் வகைகளில் அடிப்படையில் உரிமம்தாரரால் உ.அ. (HT) மற்றும் தா.அ. (LT) வகையின் தனித்தனியான மின் கடத்திகள் மற்றும் புதை வடங்களுக்கான பொருட்கள் மற்றும் பணியாட்கள் வேலை நேர அளவின் சராசரி மின்கட்டண வீதப்படியான செலவினம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இந்தக் கட்டணம் ஆணையத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும். 110 கி.வோ. மற்றும் அதற்கு மேற்பட்ட அ.உ.அ. (EHT) வகைகளில், மின் இணைப்பு கம்பிகள் மற்றும் உபகரணங்களை நிறுவுவதற்கான மேம்பாட்டுக் கட்டணங்கள் அல்லது மதிப்பீட்டுக் கட்டணங்கள், இவற்றில் எது அதிகமோ அதை நுகர்வோர் செலுத்த வேண்டும். நுகர்வோர் மூலம் ஏதேனும் பொருட்கள் வழங்கப்பட்டால் உரிமம்தாரர் அதற்கான செலவினத்தை நுகர்வோரின் கட்டணத்தில் கழிக்க வேண்டும். |
| 27. | 45<br>(2) மின்னளவு செய்யும் ஏற்பாட்டுக்கான மின்னிணைப்புக் கட்டணங்கள்<br>உரிமதாரர் மின்னளவு செய்யும் ஏற்பாட்டுக்கான மின்னிணைப்புக் கட்டணங்களையும் வசூலிக்க அதிகாரம் தரப்படுகிறார். | 45<br>(2) மின்னளவு செய்யும் ஏற்பாட்டுக்கான மின்னிணைப்புக் கட்டணங்கள்<br>உரிமம்தாரர் மின்னளவு செய்யும் ஏற்பாட்டுக்கான மின்னிணைப்புக் கட்டணங்களையும் வசூலிக்க அதிகாரம் தரப்படுகிறார்.<br>மின்னளவியை அருகிலுள்ள மின்னிணைப்பு வழங்கும் மின் கம்பம் / மின் விநியோக பெட்டியுடன் இணைக்கும் மின் கம்பி / கம்பிவடம் உள்ளிட்ட மின் இணைப்பு பொருட்கள் நுகர்வோரால் வழங்கப்பட வேண்டும். |
| 28.<br><br>29. | இணைப்பு – I<br>1 மெகாவாட் மற்றும் அதற்கு மேலும் மின்தேவை அமைந்த மின்னிணைப்பின் மின்சுமை விவரங்கள்<br>[விதித்தொகுப்புத் தொடர் 6(3) பார்க்க]<br>1 முதல் 11 வரை xxx | பின்னிணைப்பு – I<br>1 மெகாவாட் மற்றும் அதற்கு மேலும் மின்தேவை அமைந்த மின்னிணைப்பின் மின்சுமை விவரங்கள்<br>[ஒழுங்குமுறைவிதி 6(3) –யை பார்க்கவும்] 1 முதல் 11 வரை xxx |
| 30.<br><br>31. | இணைப்பு – II<br>1 மெகாவாட் அல்லது அதற்கும் அதிகமான மின்தேவை கோரும் நுகர்வோருக்குத் தர வேண்டிய கணினி அமைப்பு தகவல்கள்<br>[விதித்தொகுப்புத் தொடர் 6(3) பார்க்க]<br>1 முதல் 4 வரை xxx | பின்னிணைப்பு – II<br>1 மெகாவாட் அல்லது அதற்கும் அதிகமான மின்தேவை கோரும் நுகர்வோருக்குத் தர வேண்டிய கணினி அமைப்பு தகவல்கள்<br>[ஒழுங்குமுறைவிதி 6(3) –யை பார்க்கவும்] 1 முதல் 4 வரை xxx |
| 32. | இணைப்பு – III: படிவங்கள்<br>படிவம் 1 முதல் படிவம் 8 வரை xxx | பின்னிணைப்பு – III: படிவங்கள்<br>படிவம் 1 முதல் படிவம் 8 வரை xxx |

| *வ எண்* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தப்பட்ட வகைமுறை* |
|---|---|---|
| **33.** | படிவம் I<br>தா.அ.(L.T.) மின் இணைப்புக்கான விண்ணப்பப் படிவம்<br>(தற்காலிக மின்வழங்கல், வேளாண்மை மற்றும் குடிசை மின்னிணைப்பு தவிர)<br>தாழ்வு அழுத்த மின் ஆற்றல் வழங்குதலுக்கான கோரிக்கை படிவம்<br>(ஒரு முனை / மும்முனை)<br>[ஒழுங்குமுறைவிதி 27(3) –யை பார்க்கவும்]<br>XXX<br>விண்ணபப்தாரர்(களின்) புகைப்படம்<br>**1.** முதல் **12.** வரை XXX<br>குறிப்பு: விண்ணப்பம் பின்வரும் ஆவணங்களுடன் இணைக்கப்பட வேண்டும்:<br>(i) முதல் (iii) XXX வரை | படிவம் I<br>புதிய அல்லது கூடுதல் மின்தேவைக்கான தா.அ. (L.T.) மின் இணைப்புக்கான விண்ணப்பப் படிவம்<br>(தற்காலிக மின்வழங்கல், வேளாண்மை மற்றும் குடிசை மின்னிணைப்பு தவிர)<br>தாழ்வு அழுத்த மின் ஆற்றல் வழங்குதலுக்கான கோரிக்கை படிவம்<br>(ஒரு முனை / மும்முனை)<br>[ஒழுங்குமுறைவிதி 27(3) –யை பார்க்கவும்]<br>XXX<br>விண்ணபப்தாரர்(களின்) புகைப்படம்<br>**1.** முதல் **12.** வரை XXX<br>குறிப்பு: விண்ணப்பம் பின்வரும் ஆவணங்களுடன் இணைக்கப்பட வேண்டும்:<br>(i) முதல் (iii) XXX வரை<br>(iv) விண்ணபப்தாரரின்(களின்) அடையாள (மத்திய / தமிழ்நாடு மாநில அரசால் வழங்கப்பட்டது) அட்டையின் நகல் |
| **34.** | உரிமம் பெற்றவரின் பயன்பாட்டிற்கு மட்டுமே<br>XXX | உரிமம் பெற்றவரின் பயன்பாட்டிற்கு மட்டுமே<br>XXX |
| **35.** | படிவம் IA<br>தற்காலிக மின் இணைப்பு விண்ணப்பப் படிவம்<br>தற்காலிக மின் இணைப்பு கோரும் படிவம் (ஒரு முனை / மும்முனை)<br>[ஒழுங்குமுறை விதி 27(3) பார்க்க]<br>XXX<br>விண்ணபப்தாரர்(களின்) புகைப்படம்<br>**1.** முதல் **14(3).** வரை XXX<br>குறிப்பு:<br>**1.** இந்த விண்ணப்பமனாது பின்வரும் ஆவணங்களுடன் சேர்ந்து விண்ணப்பிக்கப்பட வேண்டும்<br>(i) முதல் (iv) வரை XXX<br>உரிமம் பெற்றவரின் பயன்பாட்டிற்கு மட்டுமே<br>XXX | படிவம் IA<br>தற்காலிக மின் இணைப்பு விண்ணப்பப் படிவம்<br>தற்காலிக மின் இணைப்பு கோரும் படிவம் (ஒரு முனை / மும்முனை)<br>[ஒழுங்குமுறை விதி 27(3) பார்க்கவும்]<br>XXX<br>விண்ணபப்தாரர்(களின்) புகைப்படம்<br>**1.** முதல் **14(3).** வரை XXX<br>குறிப்பு:<br>**1.** இந்த விண்ணப்பமனாது பின்வரும் ஆவணங்களுடன் சேர்ந்து விண்ணப்பிக்கப்பட வேண்டும்<br>(i) முதல் (iv) வரை XXX<br>(v) விண்ணபப்தாரரின்(களின்) அடையாள (மத்திய / தமிழ்நாடு மாநில அரசால் வழங்கப்பட்டது) அட்டையின் நகல்<br>உரிமம் பெற்றவரின் பயன்பாட்டிற்கு மட்டுமே<br>XXX |

| வ<br>எண் | இருந்துவரும் வகைமுறை | திருத்தப்பட்ட வகைமுறை |
|---|---|---|
| 36. | படிவம்–2<br>வேளாண் மின் இணைப்பு விண்ணப்பப் படிவம்<br>(ஒழுங்குமுறை விதி 27(2) பார்க்க)<br>XXX<br>விண்ணப்தாரர்(களின்)<br>புகைப்படம்<br>1. முதல் 12. வரை XXX<br>இணைப்பு:<br>1. …………(வரிசை எண்.6 இன் படி)<br>2…………..(வரிசை எண்.7 இன் படி, பொருந்தும் பட்சத்தில்)<br>3. (வரிசை எண்.8 இன் படி, பொருந்தும் பட்சத்தில்)<br>4. (வரிசை எண். 9 இன் படி, பொருந்தும் பட்சத்தில்)<br>உரிமம் பெற்றவரின் பயன்பாட்டிற்கு மட்டும்<br>XXX | படிவம்–2<br>வேளாண் மின் இணைப்பு விண்ணப்பப் படிவம்<br>(ஒழுங்குமுறை விதி 27(2) –யை பார்க்கவும்)<br>XXX<br>விண்ணப்தாரர்(களின்)<br>புகைப்படம்<br>1. முதல் 12. வரை XXX<br>இணைப்பு:<br>1. …………(வரிசை எண்.6 இன் படி)<br>2…………..(வரிசை எண்.7 இன் படி, பொருந்தும் பட்சத்தில்)<br>3. (வரிசை எண்.8 இன் படி, பொருந்தும் பட்சத்தில்)<br>4. (வரிசை எண். 9 இன் படி, பொருந்தும் பட்சத்தில்)<br>5. விண்ணப்பதாரரின்(களின்) அடையாள (மத்திய / தமிழ்நாடு மாநில அரசால் வழங்கப்பட்டது) அட்டையின் நகல்<br>உரிமம் பெற்றவரின் பயன்பாட்டிற்கு மட்டும்<br>XXX |
| 37. | படிவம்–3<br>குடிசை மின் இணைப்பு விண்ணப்பம்<br>[27 ஆம் ஒழுங்குமுறை விதியின் 3–ஆம் உள் ஒழுங்குமுறை விதியைப் பார்க்கவும்)<br>XXX<br>விண்ணப்தாரர்(களின்)<br>புகைப்படம்<br>1. முதல் 8. XXX<br>இடம்: தேதி:<br>விண்ணப்பதாரரின் கையொப்பம் /<br>இடது கை கட்டைவிரல் பதிவு<br>குறிப்பு: விண்ணப்பதாரர் உடைமையாளராக இருப்பின், இந்த மின் பகிர்மான விதித்தொகுப்பின் படிவம்–1 இல் உள்ள குறிப்பில் பொருள் (i) மற்றும் (ii) இனங்களில் கூறப்பட்டுள்ள ஆவணங்கள் சமர்ப்பிக்க வே ண்டும். விண்ணப்பதாரர் உரிமையாளரான இல்லாத பட்சத்தில். இனம் (iii) இல் கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். புறம்போக்கு நிலத்திற்கு வழங்கப்படும் மின்னிணைப்புகள் இவ்விதித்தொகுப்பின் 27ஆம் ஒழுங்குமுறை விதியின் (12)ஆம் உள் ஒழுங்குமுறை விதியின் படி முறைப்படுத்தப்படும்.<br>உரிமம் பெற்றவரின் பயன்பாட்டிற்கு மட்டும்<br>XXX | படிவம்–3<br>குடிசை மின் இணைப்பு விண்ணப்பம்<br>[27 ஆம் ஒழுங்குமுறை விதியின் 3–ஆம் உள் ஒழுங்குமுறை விதியைப் பார்க்கவும்)<br>XXX<br>விண்ணப்தாரர்(களின்)<br>புகைப்படம்<br>1. முதல் 8. XXX<br>இடம்: தேதி:<br>விண்ணப்பதாரரின் கையொப்பம் /<br>இடது கை கட்டைவிரல் பதிவு<br>குறிப்பு : விண்ணப்பதாரர் உரிமையாளராக இருப்பின், இந்த மின் பகிர்மான விதித்தொகுப்பின் படிவம் –I –இல் உள்ள குறிப்பில் (i) மற்றும் (ii) இனங்களில் கூறப்பட்டுள்ள ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரார் உரிமையாளராக இல்லாத பட்சத்தில், இனம் (iii)–இல் கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். புறம்போக்கு நிலத்தில் வழங்கப்படும் மின்னிணைப்புகள், இவ்விதித்தொகுப்பின் 27–ஆம் ஒழுங்குமுறை விதியின் (12)–ஆம் உள் ஒழுங்குமுறை விதியின்படி ஆட்சிமை செய்யப்படும்.<br>அனைத்து வகையிலும், விண்ணப்பதாரர்(கள்) அடையான அட்டையின் (மத்திய / தமிழ்நாடு மாநில அரசால் வழங்கப்பட்டது) நகலை இணைக்க வேண்டும்.<br>உரிமம் பெற்றவரின் பயன்பாட்டிற்கு மட்டும்<br>XXX |

| *வ எண்* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தப்பட்ட வகைமுறை* |
|---|---|---|
| 38. | படிவம்–4<br>**உயரழுத்த மின் இணைப்பு விண்ணப்பம்**<br>(கூடுதல் மின் சுமை உட்பட)<br>xxx<br>விண்ணப்தாரர்(களின்)<br>புகைப்படம்<br>பெரும மின்தேவை 63 கி.வோ.ஆ. மற்றும் அதற்கு அதிகமாகும் போது புதிய மின் வழங்கல் பெறவும் அல்லது இணைந்த சுமையுடன் கூடுதல் சுமைகளை பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்<br>(27 ஆம் ஒழுங்குமுறை விதியின் 3–ஆம் உள் ஒழுங்குமுறை விதியைப் பார்க்கவும்)<br>xxx<br>1. முதல் 9(அ). xxx<br>குறிப்பு: (1) முதல் (2) xxx<br>(10) முதல் (11) xxx<br>உரிமம் பெற்றவரின் பயன்பாட்டிற்கு மட்டும்<br>xxx | படிவம்–4<br>உயரழுத்த மின் இணைப்பு விண்ணப்பம்<br>(கூடுதல் மின் சுமை உட்பட)<br>xxx<br>விண்ணப்தாரர்(களின்)<br>புகைப்படம்<br>பெரும மின்தேவை 63 கி.வோ.ஆ. மற்றும் அதற்கு அதிகமாகும் போது புதிய மின் வழங்கல் பெறவும் அல்லது இணைந்த சுமையுடன் கூடுதல் சுமைகளை பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்<br>(27 ஆம் ஒழுங்குமுறை விதியின் 3–ஆம் உள் ஒழுங்குமுறை விதியைப் பார்க்கவும்)<br>xxx<br>1. முதல் 9(அ). xxx<br>குறிப்பு: (1) முதல் (2) xxx<br>(3) விண்ணப்பதாரரின்(களின்) அடையாள (மத்திய / தமிழ்நாடு மாநில அரசால் வழங்கப்பட்டது) அட்டையின் நகல்<br>(10) முதல் (11) xxx<br>உரிமம் பெற்றவரின் பயன்பாட்டிற்கு மட்டும்<br>xxx |
| 39. | படிவம்–5<br>புது மின் வழங்கல் பெறுவதற்கான உரிமையாளர் சம்மதக் கடிதம்<br>[விதித்தொகுப்புத் தொடர் 27(4) பார்க்க]<br>xxx | படிவம்–5<br>புது மின் வழங்கல் பெறுவதற்கான உரிமையாளர் சம்மதக் கடிதம்<br>[ஒழுங்குமுறை விதி 27(4)–யை பார்க்கவும்]<br>xxx |
| 40. | படிவம்-6<br>(அரசு முத்திரைத் தாளில் பெற வேண்டும்)<br>[பார்க்க விதித்தொகுப்புத் தொடர் 27(4]<br>xxx | படிவம்-6<br>(அரசு முத்திரைத் தாளில் பெற வேண்டும்)<br>[ஒழுங்குமுறை விதி 27(4)–யை பார்க்கவும்]<br>xxx |
| 41. | படிவம்-7<br>தொழிலக, வேளாண்மை மின்னிணைப்பு தாழ்வழுத்த இசைவுப் பத்திரம்<br>[பார்க்க விதித்தொகுப்புத் தொடர் 33(1)]<br>xxx | படிவம்-7<br>தொழிலக, வேளாண்மை மின்னிணைப்பு தாழ்வழுத்த இசைவுப் பத்திரம்<br>[ஒழுங்குமுறை விதி 33(1)–யை பார்க்கவும்]<br>xxx |
| 42. | படிவம்-8<br>உயர்வழுத்த இசைவுப் பத்திரப் படிவம்<br>[பார்க்க விதித்தொகுப்புத் தொடர் 33(1)]<br>xxx | படிவம்-8<br>உயர்வழுத்த இசைவுப் பத்திரப் படிவம்<br>[ஒழுங்குமுறை விதி 33(1)–யை பார்க்கவும்]<br>xxx |

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவின்படி)

சென்னை–600 032,
2024 ஆகஸ்ட் 22.

**சி. வீரமணி,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU